Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1325)


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 03 வெள்ளிக்கிழமை (16.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 167



தமிழனின் கதை! 06



இனப்பிரச்சினை அபாயம் 08



ஆடம்பரத்தில் ஆர்வம் 12



முடங்கிக் கிடக்குது 04

## நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்திட்ட அறிக்கை ஜெனிவாவுக்கு

### இலங்கை அரசின் புதிய வியூகம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான சாத்தியக் கூற்று அறிக்கை ஒன்றை இலங்கை அரசு ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளது.

நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஜெனிவாவில் அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் மனித உரிமை மீறல் தொடர்பான பிரேரணையின் தீவிரத் தன்மையைத் தணிக்கும் வகையிலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான புதிய நடைமுறைச் செயற்திட்டம் ஒன்றை அரசு தயாரித்து வருகின்றது. இந்த செயற்திட்ட அறிக்கையை ஜெனிவாவில் சமர்ப்பிக்கும் முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. சுவிட்சர்லாந்து ஜெனிவா நகரில் நடந்துவரும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 19 ஆவது கூட்டத் தொடரில், கடந்த 7 ஆம் திகதி இலங்கைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்திற்கு இதுவரை, 22 நாடுகள் ஆதரவளிக்க திட்டமிட்டுள்ளன. ஆனால், 47 நாடுகள் உறுப்பினராக உள்ள கவுன்சிலில் ஒரு தீர்மானம் ஆதரவு பெற, 26 நாடுகளின் ஆதரவு தேவை. இதற்கிடையில், மற்ற நாடுகளின் ஆதரவைப் பெறும் பல்வேறு முயற்சிகளில், இலங்கை தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க தீர்மானம், எதிர்வரும் 23 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படலாம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழிகளிலும் பெயர்ப் பலகை

(யாழ்ப்பாணம்)

அனைத்து மாகாணங்களிலும் சேவையில் ஈடுபட்டுள்ள பயணிகள் பஸ்களில் பெயர்ப்பலகையை சரியாகப் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு மாகாண போக்குவரத்து அதிகார சபையிடம் தனியார் போக்குவரத்து அமைச்சு கோரியுள்ளது.

இதன்போது சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பஸ்ஸின் சேவை இடம் குறித்த பெயர்ப்பலகை முறையாகப் பொருத்தப்பட வேண்டும் என அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இத்திட்டத்தை ஏப்ரல் 13 ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்துமாறு மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர தெரிவித்துள்ளார். மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமைய குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## தண்டிக்கப்படாத யுத்தக் குற்றங்கள்

### சனல் – 4 புதிய காணொளி

சனல் - 4 தொலைக்காட்சி தயாரித்த இலங்கையின் கொலைக் களம் - தண்டிக்கப்படாத யுத்தக் குற்றங்கள் என்ற காணொளி நேற்று வெளியாகியுள்ளது. ஏற்கனவே இலங்கையின் கொலைக் களம் என்ற பெயரில் சனல் - 4 தொலைக்காட்சி, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான காணொளி ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது. இந்த நிலையில் அதன் தொடர்சியாக இந்த புதிய காணொளியை வெளியிட்டுள்ளது. இதில் 12 வயதான புலிகளின் தலைவர் பிரபாகரனின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நோக்கம் கொண்ட காணொளி




சனல் 4 தொலைக்காட்சியின் புதிய காணொளி குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வெளியிடப்பட்ட ஒன்று என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். குறித்த காணொளி மூலம் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றது என அவர் தெரிவித்தார். இதற்கு முன்னர் சனல் 4 வெளியிட்ட காணொளிகளில் சரத் பொன்சேகா குறித்து கூறப்பட்டதாகவும் இம்முறை (15 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கை தேவை

### இது கூட்டமைப்பின் பிந்திய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் கவுன்ஸில் உறுதிப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தம் நிறைவடைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு தவறியுள்ளதாகவும் இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் வேண்டப்பட்டுள்ளது. இலங்கை அரசினால் மீறப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் தற்போது இடம்பெறும் வன்முறைகள் பழைய குழப்பமான சூழ்நிலையை நினைவூட்டுவதாக அமைந்துள்ளதென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நல்லிணக்கம், அமைதியை ஏற்படுத்த காலம் தேவை என அரசாங்கம் கூறி வருவதாகவும் ஆனால் பல வருட காலங்களாக இதையே தொடர்ச்சியாக இலங்கை அரசு கூறி வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதனால் இலங்கையில் அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்த மனித உரிமை கவுன்ஸில் 19 ஆவது கூட்டத் தொடரில் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரச பிரதிநிதிகள் ஜெனிவா பயணம்

ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனித உரிமைகள் கூட்டத்தொடரின் அடுத்த அமர்வில் கலந்துகொள்ளவுள்ள இலங்கைப் பிரதிநிதிகளின் முதலாவது குழுவினர் நேற்று பயணமாகினர். அமைச்சர்கள் மற்றும் சட்ட மா அதிபர்கள் உள்ளிட்ட சிலர் இந்தக் குழுவில் அடங்குவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிடுகின்றார். இன்று தனது தலைமையில் மற்றுமொரு குழுவினர் ஜெனிவா நோக்கிப் பயணமாகவுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இதேவேளை, அமைச்சர் மகிந்த சமரசிங்க ஏற்கனவே ஜெனிவாவை சென்றடைந்துள்ளார். இலங்கை தொடர்பில் அமெரிக்கா (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் நேற்று தங்க நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு குளத்திற்கு அருகில் பெண்ணொருவரின் 15 பவுண் நகைகள் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரால் பறிக்கப்பட்டுள்ளன. நேற்றுப் பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த லி.அமலராணி என்பவரது தாலிக்கொடி, சங்கிலி உட்பட 15 பவுண் நகைகள் இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. உறவினர் ஒருவரின் பூப்புனித (15 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை குட்டித் தேர்தல் நடக்குமா? மார்ச் 19 இல் நீதிமன்றத் தீர்ப்பு

புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆகியவற்றுக்கான அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல்களை நடத்த தடை விதிப்பதா? இல்லையா? என மார்ச் 19 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது. மார்ச் 24ஆம் திகதி நடத்தவிருந்த இந்தப் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை தடை செய்யக் கோரும் மனுக்களை தாக்கல் செய்த தரப்பினர்களின் வாதத்தைக் கேட்ட நீதியரசர் எஸ்.சிறிஸ்கந்தராசா, தீர்ப்பு வழங்குவதற்கான தினத்தை அறிவித்தார்.

ஏற்கனவே தேர்தல் ஆணையாளர், மார்ச் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தபால் மூல வாக்களிப்பை அன்றைய தினம் நடத்துவதில்லை என தீர்மானித்துவிட்டார். ஆணைகோரும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தரப்பினருக்கும் தமது (15 ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணாகத்தில் கொள்ளை; பலாங்கொடை வாசி கைது


பண்ணாகம், விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தின் இராஜ கோபுர கும்பாபிஷேக நிகழ்வில், பக்தர்களின் ஆபரணங்களை அபகரிக்க முற்பட்டதாக அடையாளம் காணப்பட்ட இருவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் குறித்த ஆலயத்தின் உற்சவத்திற்கு வந்திருந்த பக்தர்களின் தாலிக்கொடி மற்றும் சங்கிலியை அறுத்ததாக இருவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர். இதன் போது தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என அவர்கள் அடையாளப் படுத்தியுள்ளனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் யுத்தக் குற்றம் ஏற்றுக்கொள்ள முடியாது

(லண்டன்)

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடுவதனை எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் தெரிவித்துள்ளார்.



இறுதிக்கட்ட யுத்தத்தின்போது என்ன விலை கொடுத்தேனும் யுத்தத்தை வெற்றியீட்ட வேண்டுமென அரசாங்கம் கருதியது என அவர் குறிப்பிட்டுள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பணம்

## சிவில் நிர்வாக செயற்பாட்டை மேலும் வலுவூட்டும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மத்தியஸ்தர் சபை முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மிகப்பெரும் பொறுப்புக்களை சுமக்க வேண்டிய சூழலிலேயே இது உருவாக்கம் பெற்றுள்ளது. எனவே இச் சபையின் உருவாக்கம் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் நிர்வாக செயற்பாட்டை மேலும் வலுப்படுத்தும் என ஈ.பி.டி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு சபை உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முறையாக இன்று மத்தியஸ்தர் சபை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இச்சபையின் சீரான செயற்பாட்டினூடாக மிகப் பெரும் வேலைப் பழுக்களைச் சுமந்து கொண்டிருக்கும் நீதிமன்றத்தின் சுமையில் பங்கெடுத்துக் கொள்ள முடியும்.

அத்தோடு மிக நீண்ட கால யுத்தம் இம்மாவட்டத்தின் சிவில் நிர்வாக செயற்பாடுகளை முற்றாக சீர் குலைத்திருந்தது. மீண்டும் அவை உருவாக்கம் பெற்றுள்ளன. எனவே இம் மத்தியஸ்தர் சபையின் உருவாக்கம் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் நிர்வாக செயற்பாட்டை மேலும் வலுப்படுத்தும் என நாம் கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இன் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் பதில் நீதவான் திருமதி விஜயராணி, கரைச்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அமலராஜ் ஆகியோரும் மத்தியஸ்தர் சபையின் தலைவர் மகாதேவன், உபதலைவர், உறுப்பினர்கள், கிராமசேவையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு விசேட திறன் விருத்திப் பயிற்சி


(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர்களிடம் இருந்து செயற்திறன் மிக்க சேவையினை பெற்றுக்கொள்ளும் முகமாக சிற்றூழியர்களுக்கான 2 நாள் பயிற்சிப்பட்டறை நிகழ்வு ஒன்று எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் குறித்த தினங்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இப்பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளது.

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சகல நிறுவனங்கள், வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு இவ்வாறான பயிற்சிப்பட்டறை நிகழ்வுகளை மேற்கொண்டு அவற்றின் செயற்திறன் மிக்க சேவையினை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுற்றுநிருபமொன்றினூடாக சுகாதார நிறுவனங்கள், வைத்தியசாலைகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

# மலேசியாவில் உயர்கல்வி யாழில் வழிகாட்டல் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் அனுசரணையுடன் யாழில் இரண்டாவது தடவையாக மலேசிய உயர்கல்விக் கண்காட்சி நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். ஞானம்ஸ் உல்லாச விடுதியில் ஆரம்பமாகியது.

சிகரம் ஊடக இல்ல இணைப்பாளர் கோ.றுஷாங்கனின் ஏற்பாட்டில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கண்காட்சி பிரித்தானியா, நியூஸிலாந்து, அமெரிக்கா, கனடா, மலேசியா, அவுஸ்ரேலியா உட்பட 10 முன்னணி பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் நேரடியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்கைநெறிகள் பற்றிய விளக்கங்களை அளித்தனர்.

வெளிநாட்டுக் கல்வியில் நாட்டம் கொண்ட மாணவர்களுக்கு அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் பட்டக் கல்வியை மிகக்குறைந்த செலவில் இந்தப் பல்கலைக்கழகங்களில் வழங்குவதாக கண்காட்சி ஏற்பாட்டாளர் கோ.றுஷாங்கன் தெரிவித்தார். (எஸ்)

# சுயதொழில் கடன் திட்டம்

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவினால் இம்மாவட்டத்தில் வசிக்கின்ற வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் கடன் அரச வங்கிளினூடாக செபி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கவுள்ளது.

இக்கடன் தொகையானது வட்டி குறைவானதும், ஆகக்கூடிய கடன் தொகை 2 இலட்சத்து 50 ஆயிரம் ஆகும் என்று நிஸ்கோ பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

18 - 30 வயதுக்கிடைப்பட்ட ஆண், பெண் இருபாலரும் கடன் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் தாம் மேற்கொள்ளவிருக்கும் சுயதொழில்சார் பயிற்சியினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் மற்றும் பயிற்றுவிக்கும் நிறுவனம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பயிற்றுவிக்கும் திணைக்களம், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, இவற்றில் ஏதாவதொரு நிறுவனத்தில் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது தேசிய தொழில்நுட்ப தர சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் தொழிற் பயிற்சிக்குரிய சுயதொழிலை ஆரம்பித்திருத்தல் அல்லது ஆரம்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்களை 30.03.2012 இற்கு முன்னர் ப.பஞ்சலிங்கம், பொது முகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக் கட்டடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

# கட்டாக்காலிகளின் தொல்லை தாராளம் மண்டைதீவில் பயிர்ச்செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் பெருமளவு மாடுகள், ஆடுகள், நாய்கள் என்பன கட்டாக்காலிகளாகத் திரிவதன் காரணமாக பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாய்களின் பெருக்கத்தால் ஆடுகள் வேட்டையாடப்படுவதுடன், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன.

கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளால் அண்மையில் அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த பெருமளவு நெல்வயல்கள் நாசமாக்கப்பட்டுள்ளது. வயல் நிலங்கள் முட்கம்பிகளால் அடைக்கப்பட்டிருந்த போதும் சில வயல்களில் அறுவடை நடைபெற்றமையினைத் தொடர்ந்து அவற்றின் ஊடாக மாடுகள் உட்புகுந்து அறுவடைக்கு தயாராக இருந்த வயல்களை நாசம் செய்திருக்கின்றன.

இதேவேளை, அப்பகுதிகளில கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடுகள் சில நாட்களுக்கு முன்னர் புகையிலைத் தோட்டங்களுக்குள் புகுந்து புகையிலைக் கன்றுகளை நாசம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு புகையிலைக் கன்றுகளை நாசம் செய்த ஆடுகள் விவசாயிகளால் பிடித்துக் கட்டப்பட்டு அதற்கான நட்டஈட்டுத் தொகையும் அவர்களால் அறவிடப்பட்டு உரிமையாளர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளினால் ஏற்படும் அசௌகரியங்களை போக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச சபையினை அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (பா)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நம்பிக்கை நிதியத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட செயலக கணக்காளர் ப.ஜெயராசாவும், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை பிரதேச செயலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (112)

# பயணியை நம்பியவர் தொலைபேசியை பறிகொடுத்தார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பேருந்தில் பயணித்த பெண்ணொருவர் ஆசனத்திலிருந்த பயணி ஒருவரை நம்பியதால் தனது கைத்தொலைபேசியை பறிகொடுத்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.45 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

தனியார் பயணிகள் பேருந்து ஒன்றில் நின்று கொண்டு பயணித்த பெண்மணியொருவர் தன்னுடைய கைப்பையை தனக்கருகில் ஆசனத்தில் இருந்த ஆணொருவரிடம் கொடுத்தார். குறித்த ஆண் இறங்கிச் செல்லும்போது தனது கைப்பையை மீண்டும் பெற்றுக்கொண்ட பயணி குறித்த ஆசனத்தில் இருக்கவும் சந்தர்ப்பம் பெற்றுக்கொண்டார்.

ஆசனத்தில் ஆறுதலாக இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்றை எடுப்பதற்காக கைப்பையைத் திறந்தபோது அதில் தொலைபேசி இல்லை என்பதும், குறித்த நபரே எடுத்திருக்கலாம் என்றும் அப்பெண் அழுது புலம்பிய வண்ணம் பயணத்தைத் தொடர்ந்தார்.

இதேவேளை, அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுவதாலேயே இவ்வாறான நிலை ஏற்படுவதாகவும் குறித்த பெண் நடத்துனருடன் முரண்பட்டுக் கொண்டார்.


## சிறு விளம்பரங்கள்


### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1326)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1327)

மூத்த சிறுகதை எழுத்தாளர் அநாதரட்சகனின் 'நிமிர்வு' சிறுகதைத். தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் இடம்பெற்றபோது உதயன் பூட்வெயர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் மா.புவனேந்திரன் முதற் பிரதியை பெறுவதைக் காணலாம். (படம்:தபேந்திரன்)

**மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!**

- அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## யாரை நம்பி இருக்கிறது நம் அரசியல்?

தமிழ் ஊடகங்கள்தான் காலத்துக்குக் காலம் ஏதோ ஒன்றைத் தூக்கிப்பிடித்து, ஏதோ ஓர் அதிசயம் நடக்கப் போவதாக விறுவிறுப்புக் காட்டி வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், இப்போது வெளிநாட்டு ஆங்கில ஊடகங்களும் உலகெங்கும் பரந்துள்ள நமது மக்களை உணர்ச்சிகரமாக ஏமாற்றி "சனல் ரேட்டிங்"கை உயர்த்திக் கொள்ளலாம் என்று கண்டுகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சனல் 4 இன் புதிய காணொளியைக் காண உலகெங்கும் காத்திருந்த தமிழர்கள், அதைப் பார்த்துவிட்டு ஏமாந்த கதையை அவரவர் இணையத் தளங்களில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பழைய அதே போர்க்குற்றக் காட்சிகளோடு பாலச்சந்திரன் கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சியை சேர்த்து நம்மவரின் பரபரப்பு எழுச்சிக்குத் தீனி போட்டுக் காசு பார்த்திருக்கிறார்கள்.

இறுதிப் போர்க் காலகட்டக் குரூர நிகழ்வுகள் எப்படியெப்படி இருந்தன என்று தெரியாதவர்களா நமது மக்கள்? வீடியோவில் பார்த்துத்தான் புதிதாக விளங்கிக்கொள்ள வேண்டுமா? எதற்காக இந்த உலகத் தமிழர்களுக்கும் ஊடகங்களுக்கும் அதையெல்லாம் திரும்பத் திரும்ப நினைவுபடுத்தும் குரூரம் வேண்டியிருக்கிறது?

இவற்றைத் திரும்பத் திரும்பப் பார்த்துத்தான், போரின் போது எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு வாளாவிருந்த உலக நாடுகளுக்குப் புதிதாய் உண்மை தெரிந்து இனிப் பொங்கியெழப் போகின்றன என்று எதிர்பார்க்கிறார்களா? என்ன தமிழ்ப் பேதைமை இது? குவாண்டனமோ சிறைச்சாலையில் அமெரிக்க நியாயவுணர்வுக் காவலர்கள் நடந்துகொண்ட மனிதாபிமானத் தண்டனை முறைகளை எல்லாம் படங்களாகவும் வீடியோக்களாகவும் இந்த உலகம் கொஞ்சக் காலத்திற்கு முன்புதான் விழுந்து விழுந்து பார்த்ததே! இப்போது மட்டும் என்ன ஆகிவிடும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் அல்லது எதிர்பார்க்க வைக்கப்படுகிறோம்?

இத்தகைய போர்க்குற்றக் காட்சிகளாலும், அமெரிக்க ராஜதந்திரி வந்து கைகுலுக்கிப் பேசிவிட்டுப் போவதாலும், ஜெனீவாவில் அமெரிக்கத் தீர்மானம் வெற்றிபெற்று விடுவதாலும் தமிழ் மக்களாகிய நமக்கு எப்படி விடிவு வந்து சேரப்போகிறது என்னும் அந்த மார்க்கத்தை ஏன் யாரும் விளக்குவதில்லை?

அப்பப்ப இலங்கை அரசுக்கெதிரான கொடியை, யாரையேனும் அல்லது எதையேனும் நம்பி ஆவேசமுற்றுப் பிடிப்பதும் பின்னர் அது அடங்கி, மற்றொன்றை நம்பிப் பிடிக்க ஓடுவதுமாய்... எமது மக்களின் விடிவுக்காக நம்மிடம் உள்ள அரசியல் திட்டம் அல்லது தந்திரோபாயம் இவ்வளவுதானா? தீர்வைப் பெறும் எந்தத் திட்டத்தின் பகுதியாக, ஜெனீவா போவதா விடுவதா என்ற முடிவு அல்லது அமெரிக்க உதவியோடு இங்கு மாற்றத்தைக் கொண்டுவரலாம் என்பது போன்ற நம்பிக்கைகள் வழங்கப்படுகின்றன என்று தலைவர்களிடம் யாரும் கேட்க வேண்டாமா?

அமெரிக்கா தீர்மானத்தில் வெற்றி கண்டால் நமக்கு என்ன நடக்கும் அல்லது தோற்றால் நமக்கு நட்டம் என்ன என்று விளங்கப்படுத்திவிட்டு 22 ஆம் திகதியை எதிர்பார்த்திருக்கச் சொல்லக் கூடாதா? நாம் எதற்காக அந்தத் தீர்மான வெற்றிக்குக் காத்திருக்கிறோம் என்று தெரிய வேண்டாமா?

தீர்மானத்தில் வென்ற பிறகு இலங்கை அரசிடம் அமெரிக்கா பேசி நமக்கான தீர்வை எடுத்துத் தருமா அல்லது நாமேதான் அரசுடன் பேச வேண்டியிருக்குமா? நாமேதான் பேச வேண்டுமென்றால், முன்னர் இருந்ததை விட, இதன்பிறகு பேச்சில் நமக்குச் சாதகமான நிலைமை எப்படி உருவாகப் போகிறது?

ஏனென்றால், முன்பு இலங்கை அரசாங்கத்தை மிரட்டுவதற்காக இந்தியா தானாக முன்வந்து நமக்கு உதவிகள் செய்தது. இலங்கை அரசு இந்தியாவுடன் சினேகமாகி, அந்தப் பிரச்சினையை எளிதில் கடந்தது. இப்போது அமெரிக்கா எதையோ செய்யப் போகிறது என்கிறார்கள் நம்மவர்கள். இலங்கை அரசு அமெரிக்காவைப் பார்த்தும் சினேகமாகத் தலையசைத்து விட்டால், நம்மவர்கள் அடுத்து யாரை நம்பி அரசியல் செய்யப் போகிறோம் என்பதை இப்போதே முடிவு செய்து கொள்வது நல்லதில்லையா!

- ஆசிரியர் -

# யுத்த காலத்தில் மட்டுமல்ல இன்றும் மனித உரிமை மீறல்கள்

## -எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு ஏற்ற விதத்திலான தீர்வைக் காண அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். யுத்த காலத்தில் மட்டுமல்ல இன்றும் நாட்டுக்குள் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றது என்று ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அகலவத்த, மீகாதென்ன மற்றும் புளத்சிங்கள, வெல்லம்பிட்டிய பிரதேசங்களில் நடைபெற்ற ஐ.தே.க.வின் செயற்பாட்டாளருடனான சந்திப்புக்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும் அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்ட அரசியல் தீர்வை இதுவரையில் வழங்கவில்லை. அரசியல் தீர்வு கிடைக்குமென்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் தவிடுபொடியாகியுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க முடியும். ஆனால் அரசாங்கம் அதனை நோக்கிச் செல்லத் தயாராக இல்லை.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் தொடர்பாக எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதோடு அதிலுள்ள குறைபாடுகளை சரி செய்து கொண்டு தீர்வுகளை ஏற்படுத்திக்கொண்டு முன்னகர்வுகள் தொடர்பாக தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனால், இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாரில்லை.

ஐ.நா.வின் உறுப்பு நாடான நாம் அதன் மனித உரிமைப் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளோம். அதிலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இணங்கியுள்ளோம். எனவே, இதிலிருந்து விடுபட எம்மால் முடியாது.

அதேபோன்று சர்வதேச அரசியல் மற்றும் சிவில் உடன்படிக்கைகளிலும் கையெழுத்திட்டுள்ளோம். எனவே, அதனை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு எமக்குள்ளது. இவற்றிலிருந்து விடுபட்டு செயற்பட முடியாது.

வன்னிப் பிரதேசத்தில் மக்கள் வாழ முடியாத நிலை தோன்றியுள்ளது. எமக்குள்ள பிரச்சினைகளை விட அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மண்ணெண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. இந்த மக்கள் எப்படி வாழ்வார்கள். தெற்கைப் போன்று வட பகுதி மக்களும் பெரும் நெருக்கடிக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலைகளில் பிரச்சினைகளுக்கு தீர்வு இலங்கைக்குள்ளேயே இருக்கின்றது. ஜெனிவாவிற்கு செல்வதற்கான தேவை ஐ.தே.கட்சிக்கு கிடையாது. அது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

நாட்டின் கௌரவத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டுமென நாம் கூறவில்லை. எனவே, நாட்டின் கௌரவமும் மகிந்த ராஜபக்ஷவின் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது வேறுபட்ட தனிப்பட்ட விடயங்களாகும்.

அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்குள் அல்ல எமது பலம் இறையாண்மை இலங்கைக்குள்ளேயே இருக்கின்றது என்றார்.

# நீதியமைச்சின் பெயர்ப் பலகையை பயன்படுத்தினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நீதி அமைச்சின் பெயர்ப் பலகையை சட்டவிரோதமான முறையில் வாகனங்களில் பயன் படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைசசர் ரவூப் ஹக்கீம் பொலிஸ மா அதிபர் என்.கே இலங்கக்கோனுக்கு அறிவித்துள்ளார்.

நீதி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள வாகனங்களைத் தவிர பெயர்ப் பலகையை முறைகேடாகப் பாவித்து வாகனங்களைச் செலுத்துவோருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஹக்கீம் கோரியுள்ளார்.

இத்தகவலை நாடு முழுவதுமுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு நீதி அமைச்சர் ஹக்கீம் எழுதியுள்ள கடிதத்தில் குறிபபிடப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி மாவட்டத்தில் சில தனியார் வாகனங்களில் நீதி அமைச்சின் பெயர்ப் பலகை காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கும் நீதி அமைச்சரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பாகங்களில் நீதி அமைச்சின் பெயர்ப் பலகையை சட்ட விரோதமான முறையில் பல தனியார் வாகனங்களில் பயன்படுத்துவதாக நீதி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பெண்கள், சிறுமிகளுக்கான விழிப்புணர்வே வன்முறைகளை தடுப்பதற்கு உதவும்

### சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும் பெண்கள், சிறுமியர் மீதான வன்முறைகளைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாம் முதலில் இளம் பெண்களையும், சிறுமியர்களையும் விழிப்படையச் செய்யவேண்டும். ஒரு குறுகிய காலச் செயற்றிட்டம் மூலம் . இதனை ஓரளவுக்கு தடுக்கலாம். என சர்வதேச இந்து குருமார் ஒன்றிய யாழ்ப்பாணத் தலைவர் சிவஸ்ரீ சாப வாசுதேவக்குருக்கள் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில

இவ்விடயம் சார்பாக சங்கானைக்கோட்டத்தின் ஆசிரியர்களுக்கான ஓர் அமர்வு கடந்த மாதத்தில் எமது அமைப்பினால் பரீட்சார்த்தமாக நடாத்தப்பட்டு ஆலோசனை பெறப்பட்டன. அந்த ஆலோசனைக்கு அமைவாக எம்மால் பின்வரும் தீர்வுகள் எட்டப்பட்டன. இத்தீர்வுகள் ஒவ்வெவரு பிரதேச செயலகங்கள் மட்டத்திலும் செயற்படுத்தும் போது ஓரளவுக்கேனும் சமூக ஒழுக்கங்களை பாதுகாக்கலாம் என எண்ணுகின்றோம்.

இதற்கமய வலி.மேற்கு பிரதேச சபையில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள 25 கிராம அலுவலர்கள் பிரிவினையும் 25 குழுக்களாகப் பிரித்தல்.

இப்பிரதேசத்தில் உள்ள 17 மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் 79 சனசமூக நிலையங்கள், 20 கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள், 32 பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் இவர்களை 25 குழுக்களாகப் பிரித்தல் இப்பிரதேசத்தில் உள்ள 188 ஆலயங்களினதும் குருமார்கள், ஆலய அறங்காவலர்கள், 10கிறிஸ்தவ ஆலயங்களது குருமார்கள் ஆகியோரை இணைத்து 25 குழுக்களாகப் பிரித்தல்.

இவர்களுடன் பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார சேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த தாதியர்கள் அதிகாரி ஆகியோரை இணைத்தல்.

குழுக்களில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருககும் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முதலில் வழங்கவேண்டும். அதற்கு உடனடியாக துண்டுப்பிரசுரம் விநியோகிக்கலாம்.

பிரதேசத்தில் உள்ள முதலில் ஆலோசனைகள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படும் கிராமங்களை தெரிவு செய்து அங்குள்ள தாய்மார்களை முதலிலும், பெண் பிள்ளைகளையும் நேரடியாக சந்தித்து பெண்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களையும், ஏற்படும விளைவுகளையும் சகயமாக விளங்கப்படுத்தல் வேண்டும்.

இதனை ஏனையபிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்க சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் மதகுருமார் எப்பொழுதும் தயாராக உள்ளனர்.

## யாழ். இந்துவில் ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும், சிற்ப, ஓவியக் கண்காட்சி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இலங்கை கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பின் பேரில், யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களிலுள்ள கலாசார அலுவலர்கள் இந்தச் சிற்ப, ஓவியக் கண்காட்சியினை ஒழுங்குபடுத்துகின்றனர்.

இக்கண்காட்சியில் இலங்கை கலை கலாசார அலுவல்கள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்கண்காட்சியினை யாழ். மாவட்டப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைப் பார்வையிட்டுப் பயன்பெறுமாறு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர், (06).

# வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையே சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பும்

## ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர்



(யாழ்.நிருபர்)

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும். கல்வியிலும் சரி விளையாட்டிலும் சரி வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையைச் சிறுவர்களுக்கு ஊட்ட வேண்டும். நம்பிக்கையும் அர்ப்பணிப்பான சேவையும் தான் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பும்.

இவ்வாறு கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) குறிப்பிட்டார்.

பாடசாலை முதல்வர் நா.சிவசிதம்பரம் தலைமையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வளாகத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர் சமுகத்தைச் சார்ந்ததாகும். மாணவர்களிடையே இலைமறை காயாக மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொண்டு வர ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

நம்பிக்கைதான் வெற்றியின் முதற்படி. கல்வியிலும், விளையாட்டிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஒவ்வொரு மாணவரிடத்திலும் இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை ஆசிரியர்கள்தான் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

கடந்த முப்பது வருட காலமாக நடைபெற்று வந்த யுத்தத்தின் விளைவாக எமது மக்கள் சொல்லெண்ணாத் துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர். அனைத்து மக்கள் தரப்பிலும் கொடிய வலி ஏற்பட்டுள்ளது. வலி சுமந்த மக்களாக இருந்த போதிலும் நாம் தோற்றுப்போனவர்களாக இருக்காது செயற்திறன் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், பூ.குகதாசன், நல்லூர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் அம்பலம் இரவந்திரதாஸன், ஓய்வு நிலை அதிபர் இ.அருணாசலம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார், ஈழமக்கள் ஜன்நாயகக் கட்சியின் சர்வதே. அமைப்பாளர் ம.மித்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (10)

## மருத்துவ தேவைக்காக ஒரு வருட இடமாற்றம்

வன்னியிலிருந்து மருத்துவ காரணங்களின் பொருட்டு 26 ஆசிரியர்கள் வலிகாமம் கல்வி வலயத்திற்கு நிபந்தனையின் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்கள் குறைந்தது ஒரு வருடம் முதல் கூடியது இரு வருடங்கள் வரை வலிகாமம் கல்வி வலயப பாடசாலைகளில் சேவையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிபந்தனையடிப்படையிலான ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததும் மீண்டும் முன்னர் கடமையாற்றிய பாடசாலைகளுக்குச் செல்லுதல் வேண்டும் என்ற நிபந்தனையில் கடிதம் பெற்றுக்கொண்டு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (06)

## கும்பாபிஷேகம்

வவுனியா-உச்சிலாங்குளம் அருள்மிகு முனீஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் 8.30 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது. இதேவேளை முதல்நாள் 29ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் 4 மணிவரை அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரிகைகள் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், சிவஸ்ரீ முத்து ஜெகநாதக்குருக்கள் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)

# ஆசிரியர் ஆங்கிலக் கற்கை பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட பாடசாலை ஆசிரியர்களின் ஆங்கிலத் திறன் விருத்தியினை மேம்படுத்தும் பொருட்டு, தேசிய கல்வி நிறுவகத்தினால் 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்டிருந்த மேலதிக ஆங்கில விருத்திக் கற்கை நெறிக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக யாழ்.மாவட்டப் பதில் இணைப்பாளர் கு.வர்ணகுலராஜா அறிவித்துள்ளார்.

பகுதி நேர ஒருவருட காலத்தைக் கொண்ட இக்கற்கை நெறி யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றிருந்தது.

இப்பரீட்சைக்குப் பதின்நானகு உத்தியோகத்தர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில் இருவர் அதிவிசேட சித்தியினையும், பதினொரு பேர் விசேட சித்தியினையும் பெற்றுள்ளனர். ஒருவர் பரீட்சைக்குத் தோற்றியிருக்கவிலலை. அதிவிசேட சித்தியினை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்களான அலோசியஸ் மில்றோய், கிறிஸ்ரின் மகேந்திரன், அ.விஜயானந்தனும் பெற்றுள்ளனர்.


விசேட சித்தியினை வி.மகேந்திரராஜா, தவமணிதேவி சுவாமிநாதன், வரதலக்சுமி தயாபரன், மேரிமன்றாசா பெர்னாண்டோ, எம்.மகேந்திரன், மு.வரதராஜன், அகல்யா மணிசேகரன்,' சிவச்செல்வி சிவகுமார், பிரான்சிஸ் தவநாயகம், சாந்தகுமாரி, சாந்தினி கிருபாகரன், எஸ்.மகேந்திரராஜா, உமா அருட்குமாரன் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் முதலான கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆவர். (06)

# கணக்கு அறிக்கை காட்டப்படாமையால் முடங்கிக் கிடக்கும் உழவு இயந்திரங்கள்

(முழங்காவில்)

பூநகரியில் உள்ள 19 கமக்கார அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் பல வெட்ட வெளியில் கொடும் வெயியிலிலும் மழையிலும் நிறுத்தப்பட்டு சேதமடையும் நிலையில் உள்ளன.



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கமநலச் சேவை நிலையம் ஊடாக இவ்உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. காலபோக விவசாயத்தின் போது இவ்வியந்திரங்களின் சேவை மூலம் இலட்சக்கணக்கான ரூபாய்களை கமக்கார அமைப்புக்கள் வருமானமாகப் பெற்றிருந்தன.

கமநலச் சேவை நிலைய ஒழுங்கின்படி பல கமக்கார அமைப்புக்கள் நிலையத்திற்குச் சேர வேண்டிய நிதியை செலுத்தாமலும் கணக்கறிக்கை ஒப்படைக்காமலும் இருந்துள்ளன.

கமக்கார அமைப்புக்களின் இச்செயற்பாடுகளினாலேயே இவ் உழவு இயந்திரங்கள் வெயயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் சேதமுறும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரிய நிதியைச் செலுத்தி கணக்கறிகையைச் சமர்ப்பித்த ஐந்து கமக்கார அமைப்புக்கள் தமது உழவு இயந்திரங்களைப் பெற்றுச் சென்றுள்ளதாக கம நலச்சேவை அலுவலர் தெரிவித்தார். (112)

# அடிப்படை வசதிகளின்றிய முல்லைத்தீவு பொதுச் சந்தை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பொதுச சந்தை மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் கழிந்தும் இதுவரை எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையிலேயே காணப்படுவதாக சந்தை வியாபாரிகள், பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.


மேற்படி பொதுச் சந்தை எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் குறிப்பாக கூரைகள் இன்றி உடைந்த கட்டடங்கள் மத்தியில் வியாபார நடவடிக்கை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சுற்றுமதில்களும் அமைக்கப்படாத நிலையில் கட்டாக்காலி கால்நடைகள் இரவு வேளைகளில் சந்தைக் கட்டடங்களில் படுத்துறங்குவதுடன் சுற்றுப்புறத்தை அசிங்கப்படுத்துவதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட மழை காலங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரின் மத்தியில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் நுகர்வோரும் சிரமத்தின் மத்தியில் பொருட்களைக் கொளவனவு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் பொதுச் சந்தையை ஓரளவேனும் புனரமைப்புச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வியாபாரிகளும், பொதுமக்களும் வேண்டு கோள் விடுக்கின்றனர். (04)

# விடுதிக்கு வெளியில் நோயாளர்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள 28, 29ஆம் விடுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் விடுதிக்கு வெளியில் தங்கவிடப்பட்டிருக்கிறார்கள். விடுதிகளிலுள்ள கட்டில்களில் நோயாளர்கள் இன்றி காணப்படுவதாக தரையிலுள்ள நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆண்கள் விடுதியாக இருக்கும் இவ் விடுதிகளில் முறிவு மற்றும் விபத்தில் காயப்பட்டவர்களே தங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு நிலத்தில் படுக்கும்போது வலியால் தாம் அவதியுறுவதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே வைத்தியசாலை நிர்வாகம் மாற்று ஏற்பாடு செய்துதருமாறும் நிர்வாகத்திடம் நோயாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# சிறுப்பிட்டி-கலையொளி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கலையொளி வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் இருப்பதால் குறித்த வீதியைப் புனரமைப்புச் செய்துதருமாறு கலையொளி கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

50 வருடங்களுக்கு மேலாக குறித்த கிராமத்தின் வீதி திருத்தப்படாமல் உள்ளது. பல பிரதேச சபை நிர்வாகங்கள் வந்து சென்ற போதிலும் இந்தக் கிராமத்தின் வீதி புனரமைக்கப்படுவதில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் குறித்த வீதியைத் திருத்தித் தருவதாக அரசியல் வாதிகள் வாக்குறுதி வழங்குவதாகவும் பின்னர் இந்த விடயம் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச சபைத் தேர்தல் காலத்தில் இந்த வீதி திருத்தித் தரப்படும் என்றும், நெல்சிப் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுளளதாக தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இந்தக் கிராமத்தின் வீதி ஏனைய கிராமங்களின் இணைப்பு வீதியாக இருந்து வருகின்றது. இவ்வாறான இந்த வீதியை விரைந்து புனரமைப்புச் செய்துதருமாறு குறித்த கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (02)

# பாடசாலைக் கல்வியை சீராகக் கற்று சமூகத்திற்கு வழிகாட்டியாக வேண்டும்

## யாழ்.எயிட் நிறுவன திட்டஇணைப்பாளர் பார்த்தீபன்

(திருநெல்வேலி)

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதே யாழ் எயிட நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். எந்த ஒரு மாணவனும் கற்றல் உபகரணங்கள் இல்லை என்பதால் பாடசாலைக்கு செல்ல முடியவில்லை என்னும காரணத்தை சொல்லக்கூடாது என்பது எமது நிறுவனத்தின் குறிக்கோள். மாணவர்கள் பாடசாலைக்கல்வியை ஒழுங்காகக் கற்று சமூகத்திற்கு வழிகாட்டியாகத்திகழ வேண்டும் என யாழ். எயிட் நிறுவன திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்

ஆனைக்கோட்டை உயரப்புலம் மெ.மி.த.க.வித்தியாலயத்தில் யாழ்எயிட் நிறுவனத்தினால மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை அதிபர் கு.திலீபன் தலைமையில பாடசாலை மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர், எமது நிறுவனம் இன, மத, மொழி பேதமின்றி அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டி வருகின்றது. இந் நிறுவனத்தில் பணிபுரியும் எமக்கெல்லாம் இது மிகுந்த மன நிறைவைத் தருகின்றது. மாணவனின் முதுகில் தட்டிக்கொடுத்தால் அவன் தானாகவே முன்னேறுவான் என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார் எனத் தெரிவித்தார்.

கனடாவிலிருந்து வருகை தந்திருந்த ராஜரட்ணம் தயானந்தனும் அவரது பாரியார் திருமதி குமுதினியும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினார்கள். திட்ட அலுவலர் திருமதி தர்சினியும் உரையாற்றினார். உதவித்திட்ட அலுவலர் செல்வி ம.சுசிலாவும் கலந்து கொண்டார். (137)

# சுகாதாரமற்ற குடிநீரால் கரணவாய் மக்களுக்கு நோய்

(கரணவாய்)

கரணவாய் பிரதேசத்திலுள்ள செல்வாபுரம் கிராம மக்கள் சுகாதாரமற்ற குடிநீரால் தொடர்ச்சியான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராம மக்கள் குடிநீர் இன்றி நாளாந்தம் பல்வேறு கஷடங்களை அனுபவித்து வருவதாகவும், குடிநீர் பிரச்சினை குறித்து பலமுறை பத்திரிகை வாயிலாக தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இம் மக்கள் தெரிவிக்கின்றனர். சுத்தமான குடிநீரின்றிய நிலையில் கிணற்று நீரையே குடித்து வருவதாகவும் அவையும் பச்சை நிறத்தில் சுத்தமற்ற நீராக காணப்படுகின்றதாகவும் இதனாலேயே தொடரச்சியான காய்ச்சலினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கினறனர்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மக்கள் மந்திகை ஆதாரவைத்தியசாலையிலும் கரவெட்டி அம்பன் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்ளவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேணடும் என கேட்டுக் கொள்கின்றனர். (18)

# போலிக்கிராம சேவையாளர்கள்; யாழில் இருவர் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

போலியான கிராம சேவையாளர் உறுதிப்பத்திரம் சமர்ப்பித்த இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

கடந்த மாதம் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு பிணை வழங்குவதற்கு இரு பிணையாளிகள் நீதிமன்றிற்கு சமுகமளித்துள்ளனர்.

இருவரும் நாவாந்துறை J/81 கிராம சேவை அலுவலரின் போலியான கடிதம் மற்றும் றபர் முத்திரை இட்டு வதிவிட உறுதிப்பத்திரம் சமர்ப்பித்துள்ளனர்.

மன்றில் குறித்த உறுதிப்பத்திரம் போலியானது என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கிராம சேவை அலுவலரை யாழ்.நீதவான் நீதிமன்றிற்கு அழைத்த போது மன்றில் கிராம அலுவலரை கண்டதும் இருவரும் யாழ்.நீதிமன்றில் இருந்து தப்பி ஓடிச் சென்றுள்ளனர்.

இருவரையும் நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலைய விஷேட குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை யாழ்.நீதவான் நீதிமன்ற நதிபதி .மா.கணேசராசா குற்றவாளிகளை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# மோட்டார் சைக்கிள் திருடிய ஐவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவத்துடன் தொடர்பு கொண்ட 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற இந்தத் திருட்டு சம்பவத் துடன் தொடர்புடைய 5 பேரே யாழ்.பொலிஸாரால் கைது செய்யப் பட்டிருந்தனர்.

இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளிகள் 5 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா காசு பிணையிலும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்லுமாறு தீர்ப்பளித்தார். (எஸ்)



தாய் தந்தையரை இழந்த மாணவர்களுக்கும், வலு இழந்தோருக்குமான துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு நாரந்தனை சம்பிராத மாதா கோயில அரங்கில் நடைபெற்றது. காஸ் தமிழ் பிரான்ஸ் சங்கத்தின் நாரந்தனை பகுதி பிரான்ஸ் மக்களினால் வழங்கப்பட்ட நிதியின் ஊடாக இவை வழங்கப்பட்டன. பிரான்சில் இருந்து வருகை தந்த காஸ் தமிழ் பிரான்ஸ் சங்கத்தின் உறுப்பினர் முத்துக்குமார் மற்றும் வேலணை பிரதேச சபை தலைவரும், வேலணை பிரதேச அமைப்பாளருமான ஈ.பி.டி.பி, சி.சிவராசா இவற்றை வழங்கி வைப்பதைக் காணலாம். (85)

# சேமலாபநிதி செலுத்தவில்லை; ஊழியர் தொடுத்தார் வழக்கு

(திருநெல்வேலி)

யாழ்.மாநகர சபை ஊழியர் ஒருவருக்கு சேமலாபநிதி செலுத தப்படவில்லை என குறறஞ்சாட்டப்பட்டு யாழ்மாவட்ட தொழில் திணைக்களத்தினால் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாநகர சபையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அ.ராஜரட்ணம், மாநகரசபை கூட்டிணைகப்பட்ட ஒரு நிறுவனம் என்று மாநகர ச்பை ஆணையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது எனவும் மாநகரசபையினால் ஊழியர் சார்பில் செலுத தப்படவேண்டிய சோமலாபநிதி உரியமுறைப்படி செலுத்தப்பட்டுவிட்டது என்று முறைப்பாட்டுக்காரர் தவறான முறைப்பாட்டை செய்திருப்பதாகவும் வாதாடினார். ஊழியர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் குறிப்பிட்ட ஊழியருக்கு ஆணையாளரினாலேயே நியமனக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், சேமலாப நிதியை செலுத்த வேண்டிய சட்டக்கடப் பாடு தொழில் கொள்வோருக்கே உரியது எனவும் வாதாடினர்.

இந்நிலையில் வழக்கை அடுத்தமாதம் 17ஆம் திகதிக்கு யாழ்.நீதவான் மா.கணேசராசா ஒத்திவைத்தார். (137)

## முரசின் இன்றைய பலன்

(16.03.2012 -வெள்ளிக்கிழமை)

கர வருஷம் பங்குனி 03 ஆம் திகதி. நவமி முன்னிரவு 9.09 வரை.
நட்சத்திரம் மூலம் முற்பகல் 8.44வரை. அமிர்த சித்தம்,
இராகுகாலம் 10.49 - 12.19 வரை. சுபநேரம் 6.19 - 7.49 வரை.
எமகண்டம் 3.19 - 4.49 வரை. குளிகைகலாம். 7.49 - 9.19 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பணவரவு, சிந்தித்து செயற்படவும்,பாராட்டு கிடைக்கும், திருமணம் கைகூடும். |
| ரிஷபம் | அவதானம்அவசியம், சொத்துக்களால் இலாபம், கனவுகள் பலிக்கும், வெளியூர்பயணம். |
| மிதுனம் | உறவினர் வருகை, பிணைநிற்கக்கூடாது, இருப்பிடசௌகரியம், இடமாற்றம். |
| கடகம் | எதிர்ப்புகள்,புத்திரரால் கவலை, முதலீடுகளில் கவனம், ஸ்தலயாத்திரை, |
| சிம்மம் | நல்லதகவல், முயற்சிவெற்றி, மேலதிகாரிகள் பாராட்டு, பிணைநிற்பதில் கவனம், |
| கன்னி | உறவினர் வருகை, சகோதரரால் உதவி, சுயதொழில் திருப்தி, அயலவரால் அவதி. |
| துலாம் | பெரியோர் ஆசி,விருந்துபசாரங்கள், எதிர்பாராத சொத்துக்கள், செலவுகள் அதிகரிப்பு |
| விருச்சிகம் | உறவினர் வருகை, பழைய நினைவுகள், மருத்துவச் செலவு, முயற்சியில் தடை. |
| தனுசு | சுபச்செலவு, உடல் உபாதை, குடும்பசுகம், வேலைவாய்ப்பும் பதவிஉயர்வும். |
| மகரம் | சிக்கல்கள், தொழில்துறைபயன்பெறும், பொன்பொருள்சேரும், உறவினர் உதவி. |
| கும்பம் | பரஸ்பர உதவி, இல்லிடச் சிறப்பு, விரும்பியது கிடைக்கும், காரியானுகூலம். |
| மீனம் | இறைபக்தி, குடும்ப முன்னேற்றம், விருந்துபசாரம், பெரியோர் ஆதரவு. |

# வற்றாப்பளைக்கு மின்விநியோகம் வழங்கப்படாதது ஏன்? கேட்கும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வற்றாப்பளை கிராமத்திற்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை என இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முதன் முதலில் இக்கிராமத்திலேயே மேற்கெள்ளப்பட்டதாகவும் எனினும் மின்சார விநியோகம் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மின்விநியோகத்திற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் இக் கிராமத்திற்கான மின் இணைப்பு இது வரை வழங்கப்படாமல் இருப்பது வேதனை அளிப்பதாகவும் இதற்கு பின்னர் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இக்கிராமத்திற்கும் விரைவில் மின் சாரத்தைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யுமாறு இக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# “கப்பாவிற்றி ஒவ் பில்டிங்” வதிவிடச் செயலமர்வு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கோட்டக்கல்வி அலுவலர்களுக்கான “கப்பாவிற்றி ஒவ் பில்டிங்” வதிவிடச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் சகல கோட்டக்கல்வி அலுவலர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறும், வரும்போது மடிக்கணினி உள்ளவர்கள் அவற்றையும் மின் இணைப்புக்கான வயர்களையும் கொண்டுவருமாறு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (109)



# அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது நம்பிக்கையில்லா பிரேரணையே

-எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையில் மூன்று விடயங்கள்தான் வலியுறுத்தப்பட்டுள்ளன. சர்வதேச சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் குற்றச சாட்டுகள் தொடர்பான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் ஆக்கபூர்வமான சிபார்சுகளை நிறைவேற்றல்தான் இதில் முக்கியமான விடயமாக இருக்கிறது.

அடுத்த மனித உரிமை பேரவைக் கூட்டம் நடைபெறும் போது அரசாங்கம் ஆணைக் குழுவின் சிபார்சுகளில் எந்தளவு நிறைவேற்றியிருக்கிறது, மேலும் என்னென்ன செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய அறிக்கையொன்று அக்கூட்டத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும் என்பது மற்றொரு விடயமாகும். இந்த விடயத்தில் அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது மூன்றாவது விடயமாகும்.

அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் கூறியதைப் போல் அமெரிக்கா, நாட்டை ஆக்கிரமிக்கும் நிலைமையோ அல்லது ஜனாதிபதியை மின்சாரக் கதிரையில் வைத்து மரணதண்டனை வழங்க வேண்டும் என்றோ, குறைந்தபட்சம் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக சர்வதேச விசாரணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்றோ அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

பிரேரணையின் முதலாவதும் முக்கியமானதுமான விடயம், அதாவது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் ஆக்கபூர்வமான சிபார்சுகளை நிறைவேற்றல் என்பது அரசாங்கத்திற்கு எவ்வகையிலும் பிரச்சினையாக இருக்க முடியாது. ஏனெனில், தாம் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நிறைவேற்றுவற்குத்தான் நடவடிக்கை எடுத்து வருவதாகவே அரசாங்கமும் தொடர்ந்து கூறி வருகிறது.

• ஆனால் தாம் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளில் எந்தளவு நிறைவேற்றியிருக்கிறோம், மேலும் என்னென்ன செய்ய போகிறோம் என்பதைப் பற்றிய அறிக்கையொன்றை அடுத்த மனித உரிமை பேரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் இந்த விடயத்தில் ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும்தான் அரசாங்கத்திற்கு தலையிடியாகத் தெரிகிறது.

ஏனெனில் எமது நாட்டில் எமது பிரச்சினையொன்றைத் தீர்த்துக் கொள்ள நாம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றி நாம் எங்கோ உள்ள சர்வதேச நிறுவனம ஒன்றுக்கு ஏன் வகை சொல்ல வேண்டும் என்பதே அரசாங்கத்தின் ஒரு கேள்வியாக இருக்கிறது. மறுபுறத்தில் இந்த



HUMAN RIGHTS COUNCIL

விடயத்தில் ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முற்பட்டால் அது இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகராலயத்திற்கு வழங்கும் அனுமதிப் பத்திரமாக அமையும் என்றும் அரசாங்கம் கருதுகிறது.

உண்மையிலேயே அரசாங்கத்தின் இந்த வாதம் தவறானது அல்ல. மேற் கண்டவாறு அடுத்த மனித உரிமை பேரவைக் கூட்டத்தின் போது அறிக்கை சமர்ப்பிப்பதன் மூலமும் ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதன் மூலமும் ஐ.நா. அதிகாரிகளுக்கு இலங்கை விடயத்தில் தலையிட கூடுதலான சந்தர்ப்பம் கிடைத்து விடும்.

அமெரிக்கா அதனை மிக சூசகமாகவும பண்பான முறையிலும் இராஜதந்திர ரீதியாகவும் வசனமாக்கி பிரேரணையில் உள்ளடக்கியுள்ளது. இது இலங்கையர்கள் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்ற விடயங்களில் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்பதனையே எடுத்துக காட்டுகிறது. அதனால்தான் அரசாங்கத்தின் ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதனையும் சர்வதேச நிறுவனம் ஒன்று மேற்பார்வை செய்ய வேண்டும் என்று அமெரிக்கா அந்தப் பிரேரணை மூலம் கூறுகிறது.

சர்வதேச சமூகம் என தம்மை அழைதது்க் கொள்ளும் மேற்கத்திய நாடுகள் மனித உரிமை விடயத்தில் சில நாடுகளுக்கு வேற்றுமை காட்டுவதாக அரசாங்கம் கூறுவது உண்மையே. அதேபோல் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போரின் இறுதி கட்டத்தின் போது போரை நிறுத்துமாறு மேற்கத்திய நாடுகள் கூறியதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாததன் காரணமாகவே தற்போது அந்நாடுகள் இலங்கைக்கு நெருக்குதலைக் கொடுத்து வருகின்றன என்றும் அரசாங்கம் கூறி வருகிறது.


அதுவும் உண்மையாக இருக்கலாம். ஏனெனில் மனித உரிமைகள்தான் பிரச்சினை என்றால் இஸ்ரேலியப் படையினரும் அமெரிக்கப் படையினரும் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களைவிட படு பாதகச் செயல்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், மேற்கு நாடுகளில் எவரும் அந்த மனித உரிமை மீறல்களைப் பற்றி பேசுவதில்லை.

இவை எவ்வளவுதான் உண்மையாக இருப்பினும் இப்போது அரசாங்கம் நம்பிக்கை பற்றிய பிரச்சினையையே எதிர்நோக்கியிருக்கிறது. எனவே அப் பிரச்சினை தற்போதைய ஜெனிவா மாநாட்டுக்கு அப்பாலும் நீண்ட காலத்திற்கு அரசாங்கத்தை மிரட்டிக் கொண்டே இருக்கும் போல்தான் தெரிகிறது. அதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி தான் அரசாங்கத்திற்கு இருக்கிறது. தாமே தயாரித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதே அந்த வழியாகும்.

ஆனால் "தேசப்பற்றை" முன்நிறுத்தி செயற்பட்டுக் கொண்டு இருக்கும் அரசாங்கத்திற்கு இது இலேசான விடயம் அல்ல. மேலும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டி வரும். யோகி, எழிலன் ஆகியோர் காணாமற் போனதையிட்டு இராணுவ வீரர்கள் சிலரை விசாரணை செய்ய வேண்டி வரும்.


புலிகளும் நம்பிக்கையைப் பற்றிய இந்தப் பிரச்சினையையே எதிர்நோக்கியிருந்தார்கள். அது அவர்களது வீழ்ச்சிக்கும் முக்கிய காரணமாக அமைந்தது. அவர்கள் கிராமங்களில் சாதாரண மக்களை நூற்றுக் கணக்கில் கொன்றார்கள், சுமார் ஒரு இலட்சம் முஸ்லிம்களை வடக்கிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றினார்கள், போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் கடத்தினார்கள். பின்னர் குற்றச்சாட்டுக்கள் வரும் போது ஒன்றில் அவற்றை மறுத்தார்கள், அல்லது நியாயப்படுத்தினார்கள்.

அது அவ்வப்போது குற்றஞ்சாட்டுவோரை வாயடைக்கச் செய்த போதிலும் அக்குற்றச்சாட்டுக்கள் புலிகளின் "பிரத்தியேகக் கோவையில்" சேர்க்கப் பட்டுக் கொண்டே வந்தன. அவற்றின் கூட்டு மொத்தம் புலிகளை 32 நாடுகளில் தடை செய்யக் காரணமாக அமைந



தது. இறுதியில் அது உலக நாடுகளின் ஆதரவை குறைத்து அவர்களின் தோல்வுக்கும் ஒரு காரணமாகியது. சிறிய நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் உலக அரசியலில் நம்பகத் தன்மை அவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது.

## அறிமுகம் ஆகிறது, 'மின் காசோலை'!



நாம் இன்று பயன்படுத்திவரும் காசோலைகள் விரைவில் வழக்கொழிந்து விடப் போகின்றன. அவற்றின் இடத்தை "ஈ- செக்" (E - Cheque) எனப்படும் மின் காசோலை பிடிக்கப் போகிறது.

ஓர் இங்கிலாந்து ஆய்வுக் குழு, இந்த மின் காசோலையை உருவாக்கியிருக்கிறது. இதில், வழக்கமான காசோலை முறையின் அனைத்து வசதிகளும் இருக்கின்றன. ஆனால் வங்கிகளுக்கு ஆகும் செயல்முறை மற்றும் அனுப்புதல் செலவுகள் குறையும் என்கிறார்கள்.

இந்த "ஹை-டெக் செக்", பல தலைமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் வழக்கமான செக் போலவே உள்ளது. ஆனால் இதில் எழுதுவதற்கு ஒருவருக்கு டிஜிட்டல் பேனா தேவை. அந்தப் பேனாவில் உள்ள நுண்ணிய காமிரா, பல இலட்சம் புள்ளிகளால் ஆன எந்தக் கையெழுத்தையும் பதிவு செய்துவிடுகிறது.

அந்தப் பதிவை, வயர்லெஸ் தொடர்பு மூலம் டிஜிட்டல் பேனா நேரடியாக வங்கிக்கு அனுப்புகிறது.

இந்த மின் காசோலையும், டிஜிட்டல் பேனாவும் வாடிக்கையாளருக்கு மட்டுமே உரிய பாதுகாப்பான முறையில் செயற்படும் என்பதால் ஏமாற்று வேலைகளுக்கு இங்கு இடமில்லை என்கிறார்கள் இங்கிலாந்து ஆய்வாளர்கள்.

## "ஹாலோகிராம்"

வாக்காளர் அடையாள அட்டை, வங்கிகளின் கிரெடிட் கார்ட்கள் மற்றும் அடையாள அட்டைகள் போன்றவற்றில் வட்டமான சில்வர் காகிதத்தில் உள்ள முத்திரையை பார்த்திருப்பீர்கள். இது எதற்காக பதிக்கப்பட்டுள்ளது என்று தெரியுமா?

சூரிய வெளிச்சத்தில் பார்க்கும் போது 3 அடுக்குகளாகத் தெரியும். 3 அடிப்படை வண்ணங்களைப் பயன்படுத்தி, லேசர் மூலம் இம்முத்திரைகள் பதிக்கப்படுகிறது. இதைப் போன்றே போலியாக உருவாக்க முடியாது. மேலும் நகல்களும் எடுக்க முடியாது.



இதனால் தான் இந்த பாதுகாப்பான ஹாலோகிராம் உத்தி கையாளப்படுகிறது. எழுத்துக்கள், லோகோ டிசைனகள் தனித்தனியாக 3 அடுக்குகளாக தெரிவதுதான் இதன் சிறப்பம்சம்.

ஹாலோகிராம் 3 அடுக்குகளாக லேசரில் பதிக்கப்படுகிறது. இன்று சர்வதேச அளவில் இதுபோன்ற செக்கியூரிட்டி ஹாலோகிராம் ஸ்டிக்கர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## தமிழனின் கதை!

சற்றும் மனம் தளராத தமிழன் 'செல்போனை' எடுத்து இடுப்பில் அடித்துக்கொண்டு பனிவிழும் இரவில் திரும்பி வரமுடியாத ஒற்றையடிப்பாதையில் நடந்தான். இடையில் வழிமறித்த வேதாளம் "நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லு! நீ சரியாகச் சொன்னால் மேற்கொண்டு நீ பயணிக்கலாம், இல்லாவிட்டால் உனது தலை வெடித்து சுக்கு நூறாகிவிடும்" என 'பிஸ்டலை' எடுத்து தமிழனின் நெற்றிப் பொட்டில் வைத்தது.

திடுக்கிட்ட தமிழன் 'இது சிங்கள வேதாளமாகத்தான் இருக்க வேண்டும் என எண்ணியவன் மறுகணமே ஒரு வேளை இது துணைகுழு வேதாளாமோ' என எண்ணியவாறு செல்போனை எடுத்து 'சிக்னல்' இருக்கா என பார்த்துக்கொண்டான். மூன்றாண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக அவன் தன்னை நொந்துகொண்டான். தலைவர் இருந்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்குமா? வேதாளத்துக்கு மண்டையில் போட்டுட்டு போய்க்கொண்டே இருக்கலாம். என்ன செய்வது சர்வதேசத்தின் சதி! "சரி கேளும்" என வேதாளத்தைப் பார்த்துக் கேட்டான் தமிழன்.


"தமிழனுக்கு சோறு வேணுமா? சுதந்திரம் வேணுமா?" இதற்கு மட்டும் பதில் சொல்லி விடு. தமிழனுக்கு தலைசுற்றியது. அவ்வளவு பசி! 'சோறு' என்று சொல்லிவிட்டால் அரசாங்கத்தின் ஆள் என தமிழினம் பரிகசிக்குமே எனப் பயந்தான். 'சுதந்திரம்' என்று சொல்லிவிட்டால் சோறில் லாமல் இந்த ஒற்றையடிப் பாதையில் பட்டினிகிடந்து சாக வேண்டியதுதான். வேதாளத் தின் பிஸ்டலுக்கு வேலை இல்லாமலே தனது தலை வெடித்துச் சிதறிவிடும் என எண்ணியவனின் கண்களில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்தோடியது.

இரக்கப்பட்ட வேதாளம் நெற்றிப் பொட்டிலிருந்து பிஸ்டலை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு, "நான் உனக்கு உதவ விரும்பினேன். அதனால்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். நீ சிந்திய இரத்தத்தைப் பார்த்ததினால் எனது எண்ணத்தை மாற்றிக்கொண்டேன் நீ போகலாம்" என்றது. தப்பினோம் பிழைத்தோம் என ஓடோடிவந்த தமிழன் சிங்களவனுக்கு தக்க பாடம் படிப்பிக்க வேண்டும் என நேராக ஜெனிவா போய்ச் சேர்ந்தான்.

(யாவும் கற்பனை)

- அர்வின்ஜீ.

## கடல் மிதவை



கடலில் மிதந்து கொண்டே தட்ப வெப்ப நிலையை 24 மணிநேரமும் தெரிவிக்கும் கருவி, கப்பல்கள், விமானம் மற்றும் புயல், மழை போன்றவற்றையும் தெரிவிக்கிறது. இது முற்றிலும் சூரிய ஒளியால் செயல்படுகிறது.

இதில் உள்ள சிறு ரேடியோ அலைவரிசை மூலம் கட்டுப்பாட்டு அறைக்கு செய்தியை அனுப்புகிறது. இந்த கருவி கடலில் மிதந்து கொண்டிருப்பதால், இதற்கு "கடல் மிதவை" (Buoys) என்று பெயர்.

இங்கு காணப்படும் மிதவையின் குறுக்களவு 10 அடி. இதேபோல் கண்காணிப்புகள் வானில் பலூன்களாக பறக்க விடுவதும் உண்டு.

தட்பவெப்பநிலையை பற்றி ஆராய்பவர்கள் "மெலியோரோலஜிஸ்ட்" என்று அழைக்கப்படுகின்றனர்.

# சினிமா சினிமா!


● **பா**ய்ஸ், காதலில் சொதப்புவது எப்படி உட்பட பல தமிழ் படங்களில் நடித்தவர் சித்தார்த். இவருடன் தெலுங்குப் படத்தில் ஜோடியாக ஸ்ருதிஷாசன் நடித்துள்ளார். அப்போது இருவருக்கும் நெருக்கமான நட்பு பரவி அது காதலாக மாறியதாக கூறப்பட்டது. அடிக்கடி சந்தித்துக் கொண்டிருந்த இருவரும் திடீரென்று பிரிந்து விட்டனர். அவருடன் ஜோடியாக நடிப்பதாக இருந்த தெலுங்குப் படத்தில் இருந்தும் விலகிவிட்டார் ஸ்ருதி. இந்நிலையில் ஸ்ருதி பற்றி அடிக்கடி கிசுகிசுக்கள் வெளியாகி வருகிறதாம்.



தன்னைப் பற்றி சித்தார்த்தான் வதந்தி பரப்புகிறார் என்று தகவல் பரவியதையடுத்து மனம் நொந்து போயுள்ளாராம் ஸ்ருதி.

● **ச**மீபகாலமாக தமிழில் நடிகர் வடிவேலுக்கு வாய்ப்புகள் எதுவும் வரவில்லை. இந்நிலையில் அமெரிக்காவில் தமிழ்ச் சங்கம் நடத்தும் விழா ஒன்றில் பங்கேற்க அழைப்பு வந்தது. வடிவேலுவும் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ரூபா 25 இலட்சம் வடிவேலு கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்காவில் இருந்து. விழாக் குழுவை சேர்ந்த ஒருவர் கூறும்போது, வடிவேலு ரூபா 25 இலட்சம் கேட்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு பணத்தை கொடுத்து வடிவேலுவை விழாவுக்கு அழைத்து வர யாருக்கும் விருப்பம் இல்லை. எனவே வடிவேலு இல்லாமலேயே



விழாவை நடத்த முடிவு செய்துள ளோம் என்று கூறியுள்ளார். எல்லாம் தேர்தல் மேடையால் வந்த வினை!

● **தி**ரைப்பட நடிகை ரீமா சென் - அவரது காதலர் கரன் சிங் திருமணம் சென்ற வாரம் புதுடில்லியில் நடந்தது. மின்னலே திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் ரீமா சென். திருமணத்திற்கு பிறகும் நடிப்பதை தொடருவேன் என்று கூறியுள்ளார் ரீமா சென்.



● **ஆ**க்ஷன் கிங் அர்ஜுனின் 150 வது படமான "பிரசாத்" தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளில் தயாராகியுள்ளது. அர்ஜுனின் கனவுப் படமான இதில் ஒரு சண்டைக் காட்சி கூட இல்லை. இந்தப் படத்தில் அர்ஜுனின் மகனாக கண் பார்வை இல்லாத, காது கேளாத பையனாக "பிரசாத்" என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ள சங்கல்ப், உண்மையிலேயே வாய் பேச இயலாத ஏழு வயது சிறுவன். மனோஜ் சத்தி இயக்க, இளையராஜா இசையில் உருவாகியுள்ள இந்தப் படம் பெர்லின் திரைப்பட விழாவில் கலந்துகொண்டு பரவலான பாராட்டுகளைப் பெற்றுள்ளது.



● **கௌ**தம் மேனன் இயக்கத்தில் ஜீவா, சமந்தா நடிக்கும் "நீதானே என் பொன்வசந்தம்" படத்தின் பின்னணி இசைக்கோர்ப்புப் பணிகள் அனைத்தும் ஹங்கேரியில் நடைபெறுகிறது. இந்தப் படத்துக்கு இசையமைக்கும் இளையராஜா, தனது மகன்கள் கார்த்திக் ராஜா, யுவன்ஷங்கர் ராஜா ஆகியோருடன் இணைந்து ஒரு பாடலைப் பாடுகிறார்.



● **இ**யக்குநரும் ஹிந்தி நடிகருமான பெரோஸ்கான் இயக்கும் தமிழ் படம் "கீரிப்புள்ள". யுவன், நிஷா பாண்டே ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்தை ஆர்வமுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் கஞ்சா கருப்பு. இதுவரை 200 படங்களில் நடித்துள்ள கஞ்சா கருப்பு, இந்தப் படத்தில் முதல் முறையாக பெண் வேடத்தில் நடித்திருப்பதே காரணம்.




● **செ**ல்வராகவனின் முன்னாள் மனைவி சோனியா அகர்வால் "சவுண்ட் கரேஜ்" என்ற பெயரில் சென்னையில் இசைப் பள்ளி ஒன்றைத் தொடங்கியிருக்கிறார். இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ், இந்தப் பள்ளியைத் தொடங்கி வைத்ததோடு மட்டுமல்லாமல் தனது இசைத்துறை நண்பர்களை ஆசிரியர்களாக பயன்படுத்திக் கொள்ளுமாறு சிபாரிசும் செய்துள்ளார்.



# அறத்தை நுட்பப்படுத்தும் இலக்கியம்!

**ம**னித இருப்பின் புதிர்த்தன்மையினை நீக்கி மனோதத்துவ சொல்லாடல்கள் அளிக்கும் பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு சில மாதிரிகளுக்குள் எல்லா மனிதர்களையும் அடைப்பதை பார்த்தல்மேயை விட அதிகமாக எதிர்த்தவர் விளாடிமிர் நபகோவ் ஆவார். நபகோவின் லோலிதா நாவல் அளப்பரிய வெற்றியைக் கண்டு, மிக அதிகமாக விற்பனையான நாவல்களுள் ஒன்றாக மாறியபோது அமெரிக்க விமர்சகர்கள் லோலிதாவை ஃப்ராய்டிய விமர்சனத்தின்வழி விளக்கமளித்தனர்.



டொனால்ட் பார்த்தல்மே

இந்த விமர்சனங்களைத் தன்னுடைய பேட்டிகளில் கடுமையாகத் திட்டிய நபகோவ் ஃப்ராய்டினை Sickmind Fraud என்று எள்ளி நகையாடினார். மனிதனுடைய அத்தனை உளத் துயர்களும் சில கிரேக்க புராணங்களை அந்தரங்க உறுப்புகளில் தேய்ப்பதன் மூலம் தீர்ந்துவிடும் என்று நம்புபவர்கள் ஃப்ராய்டின் கோட்பாடுகளை நம்பட்டும் என்றும் நக்கலடித்தார்.

நபகோவின் பேட்டிகள் அடங்கிய தொகுப்பு Strong Opinions. இதில் நபகோவ் ஃப்ராய்டினை மட்டுமல்லாது தஸ்தாவ்ஸ்கியையும் கடுமையாகச் சாடுகிறார். உலகளாவிய அளவில் உன்னத இலக்கிய ஆசிரியராகக் கருதப்படும் தஸ்தாவ்ஸ்கியை எதற்காக நீங்கள் மலிவான பரபரப்பினை ஏற்படுத்துகிறவர், விகாரமானவர், மோசமான எழுத்தாளர் என்றெல்லாம் தூற்றுகிறீர்கள் என்ற கேள்விக்கு எல்லா ரஷ்யர்களும் இங்கே அமெரிக்க வாசகர்கள் கொண்டாடுவது போல தஸ்தாவ்ஸ்கியை விரும்புவதில்லை, அவ்வாறாக விரும்புகின்ற ரஷ்யர்கள் தஸ்தாவ்ஸ்கியை ஒரு தீர்க்கதரிசியாகவும், கிறித்தவ மறைபொருள் வல்லுநராகவும்தான் கருதுகின்றனரே தவிர அவரை ஒரு கலைஞராகக் கருதுவதில்லை என்று பதிலளித்தார்.

மேலும் தொடர்ந்து தாஸ்தாவ்ஸ்கி ஒரு தீர்க்கதரிசி, ஆராவாரக் கைதட்டல் பெற விரும்பும் ஒரு பத்திரிகையாளர், தடாலடி நகைச்சுவையாளர் ஆகியோரின் கலவை என்றும் தூற்றுகிறார். தாஸ்தாவ்ஸ்கியின் கோமாளிக் காட்சிகள், நுண்ணுணர்வுள்ள கொலைகாரர்கள், ஆத்மார்த்தம் மிக்க வேசிகள் என்பவையெல்லாம் வேடிக்கை நிரம்பியவை என்றும் தன்னால் வாசகனாக இவற்றையெல்லாம் ஒரு கணம் கூட பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்றும் எழுதும் நபகோவ் தஸ்தாவ்ஸ்கியை ஒரு நீதிபோதகராகவே (moral preacher) கருதுகிறார். இலக்கியமும் கலையும் நீதி போதனையையும் நடத்தை ஒழுக்க விதிகளையும் (morals) வலியுறுத்துவதில்லை மாறாக அவை அறத்தையே (ethics) நுட்பப்படுத்துகின்றன என்று நபகோவ் கருதுகிறார்.

சமூக நடத்தை ஒழுக்க விதிகளையும் (morals) அறத்தினையும் (ethics) நுட்பப்படுத்தி வேறுபடுத்துவதில் பின்நவீனத்துவ இலக்கியவாதிகளும் தத்துவ அறிஞர்களும் ஒத்துப்போகக் கூடியவர்களாக இருக்கிறார்கள். காண்ட்டின் சிந்தனையை நடத்தை ஒழுக்க விதிகளுக்கு உட்பட்டது என்று தெரிதா விமர்சிப்பதும் தத்துவத்தை கலையும் இலக்கியமும் பேசுகின்ற அறம் நோக்கி நகர்த்திச் செல்வதற்குத்தான். இந்த தத்துவ சரடு பின்நவீன தத்துவத்திலும் இலக்கியத்திலும் பல தளங்களில் நிகழ்த்திக் காட்டப்படுகிறது.

இவற்றைச் சுருக்கிச் சொல்வது அவற்றின் நுட்பத்தினையும் சிக்கலையும் எளிமைப்படுத்துவதாகும். என்றாலும் தெளிவிற்காக இவற்றைச் சொல்லி வைக்கலாம். இதன் ஒரு தளம் உலகளாவிய (நவீனத்துவ) இலட்சியங்களைப் பேணுவதற்கு எதிராக சிறு பண்பாடுகளின் மானிடவியல் தரவுகளையும், வாழ்வியலையும், தருணங்களையும் முன்வைப்பது. இரண்டாவது தளம் சட்டம், அரசு, அரசின் இறையாண்மை ஆகியவற்றை சமூக ஒப்பந்தத்தின் அடிப்படை பின்னல்களாக முதன்மைப்படுத்தாமல், தனி மனிதன், குழும விழுமியங்கள், cosmopolitanism, கருத்தாக்கங்களின் கட்டுக்கோப்பு (integrity) ஆகியவற்றினை சமூக ஒப்பந்தத்தின் (social contract) தூலமான அலகுகளாகக் காணுதல்.

மூன்றாவது தளம் இலக்கியத்திலும் தத்துவத்திலும் எதனையும் இயல்பானது இயற்கையானது என்று ஏற்றுக்கொள்ளாமல் அவற்றின் வரலாற்றினை வெளிப்படுத்துகின்ற அதேநேரத்தில், மனித வாழ்வின் புதிர்த்தன்மையினை புதிராகவே வைத்திருத்தல். எளிய தீர்வுகள், எளிமைப்படுத்துதல்களின் சௌகரியம் ஆகியவற்றை இலக்கியத்தில் நிராகரிப்பது ஒரு வகையில் சுலபம். ஆனால் தத்துவத்தில் இதை சாதிப்பது மிகவும் கடினமான காரியமாகும். தெரிதாவின் எழுத்து முறை ஒரு வகையான இரட்டைப் பேச்சாக (double speak) இருப்பதும் இலக்கியத்தின் தன்மையினை அடைவதும் இதனால்தான்.




நபகோவ் இலக்கியம் வாழ்வின் புதிர்த்தன்மையினை முன்வைக்கக்கூடியது எந்த வகையான விளக்கங்களுக்கும் ஆட்படாதது என்பதை விளக்கும் போதெல்லாம் இலக்கியத்தை நாட்டுப்புற/தேவதைக் கதைகளோடுதான் ஒப்பிடுகிறார். நபகோவின் புகழ்பெற்ற கூற்றுகளுள் ஒன்று: "Great novels are above all great fairy tales ... literature does not tell the truth but makes it up." என்பதாகும்.

பார்த்தல்மேயைப் போலவோ இதர அமெரிக்க பின்நவீனத்துவ எழுத்தாளர்களான, ஜான் பார்த், தாமஸ் பிஞ்ச்சன் ஆகியோரைப்போலவோ நபகோவ் ஏற்கனவே இருக்கக்கூடிய நாட்டுப்புற/தேவதைக் கதைகளின் மறு உருவாக்கத்திலோ அல்லது அவற்றை நாவலின் ஊடுபாவாக்குவதிலோ ஈடுபடுவதில்லை மாறாக தன்னுடைய படைப்பே தேவதைக் கதைத்தன்மை கொண்டது என்கிறார். நபகோவின் நாவல்களில் "அடா" இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

- எம்.டி.முத்துக்குமாரசாமி

## மோனாலிசா ஓவியம்



**உ**லகப்புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தை அனைவரும் பார்த்திருக்கலாம். அந்த மர்மப் புன்னகையின் விளக்கங்கள் போல ஓவியத்தைப் பற்றியும் தகவல்களுக்குக் குறைவில்லை. அதிசய தகவல்களில் சிலவற்றைப் பார்க்கலாம்.

அழகும், செல்வமும் இணைய "லிஸாகொர்மினி" என்ற பெண்ணின் உருவம் தான் மோனாலிசா ஓவியமானது.

இதை வரைந்தவர், ஓவியர் லியானார்டோ டாவின்சி. இதை வரைய இவர் எடுத்துக் கொண்ட காலம் 6 ஆண்டுகள். இந்தப் படம் வரைய ஆரம்பிப்பதற்கு சில நாட்கள் முன்பு லிசாவின் குழந்தை இறந்து போனது. அதற்குத் துக்கம் அனுசரிக்கும் வகையில் அவள் அப்படத்தில் கறுப்பு உடையில் காணப்படுகிறாள். இந்த படத்தைப் பொக்கிஷம் போல் காப்பாற்றி வந்த டாவின்சி, சில வருடங்களுக்குப் பின், பிரான்ஸ் மன்னருக்கு 12 ஆயிரம் பிராங்கிற்கு விற்றார்.

# படையினருக்கு எதிரான விசாரணை அனுமதிக்க முடியாது என்கிறது ஐ.தே.க



(கொழும்பு)

படைவீரர்களுக்கு எதிரான யுதத்க் குற்றச் செயல் விசாரணைகளை அனுமதிக்க முடியாது எனவும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படைவீரர்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துவதாக இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் உறுதியளித்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது.

எனினும், படையினருக்கு நெருக்கடி ஏற்படக் கூடிய வகையிலான விசாரணைகளை எதிர்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானதிற்கு ஆதரவளிக்கப்படும் அதே வேளை, தீர்மானத்திற்கு எதிராக கண்டனம் வெளியிடப்படமாட்டாது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுதப்பட வேண்டும்.

கடந்த தடவை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது வெளிவிவகார அமைச்சரும், சட்ட மா அதிபரும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தனர்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென ஆணைக் குழுவின் பரிந்துரை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

சட்டம் ஒழுங்கை உரிய முறையில் இந்த அரசாங்கம் நிலை நாட்டத் தவறியுள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ள காரணத்தினாலேயே சர்வதேச சமூகம் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிச் செயற்பாட்டாளர்களுக்கு நவநீதம்பிள்ளை இடமளிப்பு

## திவயின பத்திரிகை கூறுகிறது

(கொழும்பு)

புலிகள் அமைப்புக்காகக் குரல் கொடுத்து வந்த புலிகளின் செயற்பாட்டாளர்கள் பலருக்கு, ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் செயற்பாடுகளை முன்னெடுக்க மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இடமளித்துள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் மாணிக்கவாசகர், சபாநாயகர் ஜோன் பால்ராஜ், சட்ட ஆலோசகர் கெரன் பாக்கர் ஆகியோர் மனித உரிமைப் பேரவை மண்ட பத்தில், வெளிநாட்டுத் தூதுவர் களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்

இவர்களைத் தவிர இந்தியாவில் உள்ள புலிகளின் ஆதரவாளர்களான பேராசிரியர் மணிவண்ணன், போல் நியூட்டன் ஆகியோரையும் புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகள மனித உரிமைப் பேரவைக்கு அழைத்து வந்துள்ளனர். அத்துடன் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் புலிகளுக்காக குரல் கொடுத்த உறுப்பினரான ரொபர்ட் ஈவான்ஸ்ூம் இவர்களுடன் இணைந்துள்ளதாக திவயின கூறியுள்ளது.

# வெளிநாட்டு நாணயத்தாள் வைத்திருந்த மூவர் கைது

ஒருகோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய வெளிநாட்டு நாணயங்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மோசடித் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் சந்தேகநபர்களிடம் இருந்து ஒருதொகை பயணிகள் காசோலையையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் மாளிகாவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைதான மூன்று சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர்.



துணை மருத்துவ உத்தியோகத்தர்களின் பகிஷ்கரிப்புக் காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளின் வெளிநோயாளர்களுக்கான மருந்துகள் அரச ஒசுசலவின் கிளைகளில் நேற்றுமுன்தினம் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இவ்வாறு நோயாளர்களுக்கான மருந்துகள் விநியோகிக்கப்படுவதைக் காணலாம்.

## மேர்வின் விவகாரம் 82பேரிடம் வாக்கு மூலம்

(கொழும்பு)

களனி பிரதேச சபைக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்குமிடையில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் 82 பேரிடமிருந்து பொலிஸார் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர். அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் களனிப் பிரதேச சபை ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் உட்பட 82 பேரிடமே இந்த வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

அமைச்சர் மேர்வினிடமிருந்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என். ஏ. ரி. ஜெயசிங்க வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளார். இதன் முழுமையான அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை இனக்கலவரத்தை தூண்டச் செய்யும்

## எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ஜெனிவாவில் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளது. அது நிறைவேற்றப்பட்டு சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இராணுவ வீரர்கள் உட்படுத்தப்பட்டால் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்டதைப் போன்ற இனக்கலவரம் இலங்கையில் இடம்பெறும் என்று பேரினவாத அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் இனங்களுக்கு இடையில் பிரச்சினைகளை உருவாக்கும் வகையில் மேற்குலக சமூகம் செயற்படக் கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைபபும் அமெரிக்காவுடனும் ஏனைய தீய சக்திகளுடனும் இணைந்து இலங்கைக்கு எதிராக செயற்படுவதை உடன் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க இது தொடர்பாக தொடர்ந்து கூறுகையில்:

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கடுமையாகச் செயற்பட்டு வருகின்றது. இதில் மேற்குலக நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூடடமைப்பு இணைந்து கொண்டு நாட்டை மீண்டும் சீரழிக்கும் பிரேரணையை ஆதரித்து பேசி வருகின்றது.

எவ்வாறாயினும் புலிகள் இலங்கையில் ஒழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும நிரந்தர சமாதானமும் ஏற்பட்டுள்ளது. இதனைச் சீர்குலைக்கும் வகையிலேயே அமெரிக்காவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டு வருகின்றன.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைச் சமர்ப்பித்துள்ள அமெரிக்கா அதன் ஊடாக இலங்கை இராணுவத்தை சர்வதேச விசாரணைகள் பொறிமுறைக்குள் சிக்க வைத்து தண்டனைகளை வழங்கவே முயற்சிக்கின்றது.

புலிகளை அழித்திருக்காவிட்டால் இன்று இலங்கை இவ்வாறான சவால்களை ஒருபோதும் எதிர்கொண்டிருக்காது.

எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரச் சூழலை நாட்டில் ஏற்படுத்த அமெரிக்காவோ கூட்டமைப்போ முயற்சிக்கக்கூடாது.

தேசியப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று உள்ளது. அதே போன்று நீதிமனறக் கட்டமைப்பு ஒன்றும் உள்ளது. எனவே ஜெனிவாவில் பிரேரணையைக் கொண்டு வந்து உள்நாட்டுச் சம்பவங்களை விசாரணை செய்யவேண்டிய திலலை எனத் தெரிவித்துள்ளார.

# யுத்தம் முடிவடைந்த பின்னரும் படையினர் மேம்பாட்டுத் திட்டங்கள்

(கொழும்பு)

படைகளைக் கலைக்காமல் அவர்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

என்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லகஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

அநேகமான நாடுகள் யுத்தம் நிறைவடைந்தவுடன் படைகளைக் கலைத்து விடும். ஆனால் இலஙகையில் பயங்கரவாத யுத்தம் நிறைவடைந்தவுடன் படைகளை கலைக்காமல் அவர்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை அரசாங்கம் பாரியளவு மேற்கொண்டு வருகிறது.

வீடுகள் அடங்கிய நகரங்களை உருவாக்குவதை விட படை வீரர்கள் வசிக்கும் பிரதேசங்களில் அவர்கள் விரும்பும் சூழ்நிலையில் வசதிமிக்க வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் தீர்மானித்தார். இதன் பிரகாரம் இராணுவ வீரர்கள் தெரிவு செய்யும் காணியில் இதுவரை ஏராளமான வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்றார்.

# குற்றவாளிகளை அரசியலில் இணைத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

குற்றச் செயல்களுடன் தொடர புடையவர்களை அரசியலில் இணைத்துக் கொள்ளும் தொகுதி அமைப்பாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுகக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சில தொகுதி அமைப்பாளர்கள் குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

கஹவத்தை இரட்டைக் கொலை, தங்காலை வெளிநாட்டுப் பிரஜை கொலை, வெலிகாபொல இளைஞர் கொலை, பாலியல் வன்முறை, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு கட்சி எந்தவிதமான மன்னிப்பையும் வழங்காது.



அவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு ஆதரவையும் அடைக்கலத்தையும் வழங்கும் சிரேஷ்ட அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

35. (120) → △8 → [15] ஆயின் (144) → △12 → [........]

36. △10 (3, 4, 5) △14 (7, 6, 3) △17 (6, 8, .........)

1) 4 2) 5 3) 6

37. மோட்டார் சைக்கிள் ஒன்று மணித்தியாலத்திற்கு 70 km வேகத்தில் சென்றது. அந்த மோட்டார் சைக்கிள் நிறுத்தாமல் ஒரே வேகத்தில் இரண்டரை மணித்தியாலம் பிரயாணம் செய்த பின் ஓரிடத்தில் தரித்து நின்றது. அது பிரயாணம் செய்த தூரம் எவ்வளவு?

1) 175 Km 2) 140 km 3) 105 km


**பின்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு வினாக்களிற்கு விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக**

| தீப்பெட்டி 1<br>கற்பூரம் 1 | 5/= |
|---|---|
| தீப்பெட்டி 6<br>கற்பூரம் 5 | 27/= |

38. தீப்பெட்டி ஒன்றின்விலை யாது? ..............................................

39. கற்பூரம் இரண்டின் விலை யாது? ..............................................

40. குழந்தையொன்றினது வளர்ச்சிப் படிநிலைகளைக் கீழேயுள்ள படம் காட்டுகின்றது. ஆனால் படங்கள் ஒழுங்கு வரிசையில் தரப்படவில்லை. கீழே தரப்பட்டுள்ள விடைகளில் எது எவ்வொழுங்கைச் சரியாகக் காட்டுகின்றது.




1) CBDEA 2) BECDA 3) EDCBA 4) EBCDA 5) CBEDA

## கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 40 கேள்விகளின் விடைகள்

01. 1) பற்சுகாதாரம்
 2) உள், வெளிப்பக்கமாக
 3) இனிப்புப் பண்டங்கள், பானங்கள் போன்ற வற்றின் பாவனையை குறிக்க வேண்டும்
 4) பற்களைத் துலக்குவதற்கு 5) பல்
 6) காலை, மதியம், இரவு உணவு நேரங்கள்
 7) இனிப்பு
02. 1) தொடர்ந்து முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்.
 2) வயது வந்த பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருக்காது.
03. 1) சவர்க்காரம் 2) காய்ச்சல்
04. 1) பிளிறும் 2) பேத்தை 3) நிரை 4) பாகன்
05. 1) எனக்கு பசிக்கிறது / எனக்குப் பசி / எனக்கு பசியாக இருக்கிறது.
06. what is your Name? what's your Name?
07. நாங்கள் பாற்சோறு சாப்பிடுவோம்
08. தே பொன்ன
09. 1) அந்து 2) கரப்பான்
 3) இராமபாணம் 4) மைனா
 5) தேனீ 6) குளவி
 7) எறும்பு 8) மரங்கொத்தி

10) 2 11) 2 12) 4 13) 1 14) 1
15) 4 16) 3 17) 2 18) 1 19) 2
20) 2 21) 2 22) 4 23) 3 24) 4
25) 2 26) 3 27) 1 28) 1 29) 2

30. 1) 240.00 2) 30.00
 3) 1 1/2 kg / 1500g 4) 500 g
 5) 2.00 6) 60.00
31. 1) 45 2) 105 3) 35
 4) 960.00 5) 20
 6. செவ்வாய் புதன்
32. 1.30
33. 100.00
34. 157.50
35. 36 நாட்கள்





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 41



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**இவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
**தரப்பட்ட கோலத்தை அவதானியுங்கள்**

(6342) → (3426) → (4263) → (2634) (........)

01. இந்தக் கோலத்திற்கேற்ப வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான எண் யாது?
 1) 4263 2) 3426 3) 6342

**தரம் 5 இற்கு நடாத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றின் நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அவ்வட்டவணையில் சில அடைப்புக்கள் அழிந்துள்ளன. அவற்றைப் பூரணப்படுத்துக.**

| | | ஆரம்பித்த நேரம் | முடிவுற்ற நேரம் | செலவாகிய காலம் |
|---|---|---|---|---|
| 02. | வினாத்தாள் 01 | 09.15 am | ............................ | 45 நிமிடங்கள் |
| 03. | இடைவேளை | ............................ | 10.30 am | 30 நிமிடங்கள் |
| 04. | விடைத்தாள் 02 | 10.30 am | ............................ | 1 மணி 15 நிமிடங்கள் |


**பன்வருவனவற்றிற்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**


05. கதிரை என்பதை ABC எனக் குறிக்கலாமாயின், திரைப்படம் என்பதைக் குறிக்கும் எழுத்துக்கள் எவை?
 1) ABCDEF 2) BCADEF 3) BBCDEFG 4) BCAB

06. அறுபது ரூபாவை ஐவர் சமமாகப் பகிர்ந்தார்கள் எனின், இருவருக்குக் கிடைத்த தொகைக்கும் மூவருக்குக் கிடைத்த தொகைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

 1) 12 2) 24 3) 36 4) 48

**கீழே காணப்படும் படங்கள் தொடர்பான நான்கு சொற்களில், ஒரு சொல் அப்படத்திற்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

07. 
 1) ஒளி
 2) பகல்
 3) குளிர்ச்சி
 4) வெப்பம்

08. 
 1) நீந்தும்
 2) நடக்கும்
 3) மிதக்கும்
 4) உறங்கும்

**முதல் மூன்று உருக்களினதும் சுற்றுக் கோலத்தை இனங்கண்டு, நான்காவது உருவின் கோலத்தை பூரணப்படுத்துக.**

09.

| 1) | | 2) | | 3) | | 4) | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | க | று | பு | ப் | று | க | ...... |
| று | ப் | ப் | க | க | பு | ...... | ப் |

10. ஆறு மாணவர்கள் படிப்பதற்கு இரண்டு மேசைகளும், நான்கு கதிரைகளும், இரண்டு புத்தகங்களும் வழங்கப்பட்டன. இதன்படி மூன்று மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முறை யாது?

1) ஒரு மேசை, ஒரு கதிரை, ஒரு புத்தகம்
2) ஒரு மேசை, மூன்று கதிரை, ஒரு புத்தகம்
3) ஒரு மேசை, இரண்டு கதிரை, ஒரு புத்தகம்

11. 2 பெரிய பூக்கள் வரையக்கூடிய இடத்தில் 6 சிறிய பூக்கள் வரைய முடியும். எனவே, 9 சிறிய பூக்கள் வரையக்கூடிய இடத்தில் எத்தனை பெரிய பூக்கள் வரைய முடியும்?
1) 3 பெரியபூக்கள் 2) 4 பெரிய பூக்கள் 3) 5 பெரிய பூக்கள்

12. 210 ➔ 321 ➔ 432 ➔ 543 ➔ ..........

13. "ஆழம் அறியாமல் காலை விடாதே...." எனும் பழமொழியின் உள்ளார்ந்த கருத்து யாது?
1) ஆழம் அறிந்துதான் காலை விடவேண்டும் என்பதாகும்.
2) ஆராய்ந்து அறியாமல் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது என்பதாகும்.
3) காலுக்கேற்ற ஆழம் இருப்பின் காலை விடலாம் என்பதாகும்.

14. 'கழிவுப் பொருட்களை பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும்' இக்கூற்றுக்குப் பொருந்தாத கூற்று எது?.
1) கழிவுப் பொருட்களில் ஆக்கப் பொருட்களைச் செய்ய வேண்டும்
2) கழிவுப் பொருட்களை வீட்டில் சேமித்து வைக்க வேண்டும்.
3) கழிவுப் பொருட்களை மீள் உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

15. கேக் ஒன்றின் 1/4 மாலாவிற்குக் கிடைத்தது. அக்கேக்கின் 3/8 ராஜாவிற்குக் கிடைத்தது எனின், யாருக்குக் கூடுதலான பங்கு கேக் கிடைத்தது?
1) ராஜா 2) மாலா 3) இருவருக்கும் 4) கூறமுடியாது


16. கமலன் ஒரு பயணத்தை மாலை 7 மணிக்கு ஆரம்பித்து மறுநாள் முற்பகல் 3 மணிக்கு முடித்துக்கொண்டான். அவன் பயணம் செய்த மணித்தியாலயங்கள் எவ்வளவு?
1) 8 மணித்தியாலயங்கள் 1) 10 மணித்தியாலயங்கள் 3) 4 மணித்தியாலயங்கள்

17. பொழுதினை ஒழுங்கு முறைப்படி காட்டு விடை யாது?
1) இரவு - பகல் - காலை - மாலை
2) காலை - பகல் - மாலை - இரவு
3) பகல் - மாலை - இரவு

18. பருமனின் ஒழுங்குமுறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை எது?
1) நாடு - மாகாணம் - உலகம் - கிராமம் 2) கிராமம் - உலகம் - மாகாணம் - நாடு
3) கிராமம் - மாகாணம் - நாடு - உலகம்

19. பெறுமதியின் ஒழுங்கு முறைப்படி பொருட்களைக் காட்டும் விடை எது?
1) தங்கம் - வெள்ளி - இரும்பு - செம்பு 2) வெள்ளி - செம்பு - தங்கம் - இரும்பு
3) தங்கம் - வெள்ளி - செம்பு - இரும்பு

**கீழேயுள்ள உருவத்திற்கு மிகவும் பொருத்தமான சொற்றொடரைத் தெரிவு செய்க.**


20. 
1) நீரில் நீந்திச் செல்லும்
2) வானில் பறந்து செல்லும்
3) தரையில் நடந்து செல்லும்

21. 
1) மழை பெய்யாது தடுக்கும்
2) மழையில் நனையாது தடுக்கும்
3) வானத்தை வெளுக்கச் செய்யும்



22. 
1) வண்டிலில் ஏற்றிச் செல்லும்
2) வண்டிலை இழுத்துச் செல்லும்
3) வீட்டைக் காவல் காக்கும்

**கோலத்தை அவதானித்து விடை எழுதுக**




23. ✡ இன் பெறுமதி யாது?
1) 4 2) 8 3) 14

24. "B" என்னும் இடத்தில் வரவேண்டிய எண் யாது?
1) 14 2) 20 3) 15

**உருக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள சொற்களைத் தெரிவு செய்க**

25. 
1) தாவரம், உணவு., மருந்து
2) உணவு, கடை, காடு
3) நாடு, புலி, வீடு

26. 
1) மிருகம், காடு, அனைத்தும் உண்ணி
2) மிருகம், நாடு, மாமிச உணவு
3) மிருகம், காடு, மாமிச உண்ணி

**பின்வரும் விபரங்களை அவதானித்து விடை தருக**

| | |
|---|---|
| 1 kg சீனி | ரூ. 64.00 |
| 1 Kg சீனி + 500g தேயிலை | ரூ. 264.00 |

27. 1/2 kg கீனியின் விலை யாது?
1) 32 ரூபா 2) 64 ரூபா 3) 100 ரூபா

28. 2 kg தேயிலையின் விலை யாது?
1) 400 ரூபா 2) 800 ரூபா 3) 700 ரூபா

29. 1 kg சீனியினதும் 0.5 kg தேயிலையினதும் விலை யாது?
1) 264 ரூபா 2) 200 ரூபா 3) 64 ரூபா

30. நேற்று வெள்ளிக்கிழமை எனின், நாளை மறுதினம் என்ன கிழமை?
1) திங்கள் 2) ஞாயிறு 3) சனி

31. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யார்?
1) சந்திரிகா பண்டாரநாயக்கா 2) ரணில் விக்கிரமசிங்க 3) மகிந்த ராஜபக்ஷ

**வாக்கியத்தின் கூற்றுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.**

32. ஓடும் விமானத்தில் எப்பொழுதும் இருப்பவர்
1) விமானி 2) பயணி 3) சரக்குகள்

33. **வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்ணை எழுதுக.**

| | | |
|---|---|---|
| 9 | 12 | 15 |
| 6 | 3 | 18 |
| A | 24 | 21 |

A = ....................

**பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து கோடிடுக.**

34. எறும்பூரக் கற்குழியும்.
01) நற்கருமங்கள் பின்னர் எமக்கு கைகொடுக்கும்.
2) விடாமுயற்சி வெற்றி தரும்
3) தினமும் எறும்பு ஊர்ந்து செல்லுவதனால் கற்களில் குழி உருவாகும்.

# நக்கீரனைத் தோற்கடித்த அல்வாய் மனோகரா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை லீக் அனுசரணையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகரா உதைபந்தாட்ட அணி 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் முதல் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் அல்வாய் மனோகரா உதைபந்தாட்ட அணி நக்கீரன் உதைபந்தாட்ட அணியை எதிர்த்து மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் நக்கீரன் அணி முதல்கோலைப்போட்டு இடைவேளைகளுக்கு முன்னர் 1:0 என முன்னிலை வகித்தது. எனினும் இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் மனோகரா அணி வீறுகொண்டெழுந்து முதல்கோலைப் போட்டு போட்டியைச் சமநிலைப்படுத்தியது.

89 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப்போட்டு வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது மனோகரா அணி. (எஸ்)

# துணுக்காய் கல்வி வலய பெருவிளையாட்டு முடிவுகள்

(மாங்குளம்)

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிடையே ஆன வலய மட்ட பெரு விளையாட்டுக்கள் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், கற்சிலைமடு அ.தக. பாடசாலை, மாங்குளம் மகாவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திகல்லூரி மைதானங்களில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு நடைபெற்ற சில போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

**எல்லே – ஆண்களா**

முதலாமிடம் - கற்சிலைமடு அ.த.கபாடசாலை, இரண்டாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - பாண்புயன்குளம் மகாவித்தியாலயம்.

**எல்லே – பெண்கள்**

முதலாமிடம் - மல்லாவி மத்திய கல்லூரி, இரண்டாமிடம் - பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

**கரப்பந்து – பெண்கள்**
**15 வயதுப் பிரிவு**

முதலாமிடம் -பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - யோகபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - முத்தையன்கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை.

**கரப்பந்து – பெண்கள்**
**17 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் மாங்குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம். (42)

# வவுனியா இந்துக் கல்லூரி 8 விக்கெட்டால் வெற்றி

வவுனியாவில் முதற் தடவையாக இடம்பெறும் மும்முனை 50 ஓவர் கொண்ட கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் போட்டியில் வவுனியா இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகா, வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றுவரும் வவுனியா மத்திய மகாவித்தியாலயம் வவுனியா இந்துக்கல்லூரி மற்றும் விபுலானந்தாக் கல்லூரிகளுக்கு இடையிலான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இந்த நிலையில், நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் வவுனியா இந்துக்கல்லூரி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி, 112 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹரி பிரணவன் 76 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பதிலளித்த வவுனியா இந்துக் கல்லூரி 2 விக்கட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

மனோராஜ் 56 ஓட்டங்களையும் அணித்தலைவர் அருள் குமார் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

# மலிங்கவின் ஆட்டத் திறனில் பிரச்சினைகள் தெுவுமில்லை



இலங்கை அணியின் பந்து வீச்சாளர் லசித் மலிங்க இலங்கை அணிக்காக மீண்டும் சிறப்பாகப் பந்துவீசுவார் எனவும், அவரின் ஆட்டத்திறன் தொடர்பாக எந்த விதப் பிரச்சினைகளும் கிடையாது எனவும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான சம்பக்க ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

லசித் மலிங்க தொடர்ச்சியாக இலங்கை அணிக்காக போட்டிகளில் பங்குபற்றிவந்த நிலையில், ஓரிரண்டு போட்டிகளில் அவர் சிறப்பாகப் பந்துவீச முடியாது போனமை இயற்கை யானது எனவும் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற முக்கோண ஒருநாள் தொடரில் லசித் மலிங்க சில போட்டிகளில் மிகச்சிறப்பாகவும், சில போட்டிகளில் மோசமாகவும் பந்துவீசியிருந்தார். அத்தொடரில் 18 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அதிக விக்கெட்டுக் களை வீழ்த்தியவராக லசித்மலிங்க காணப்பட்ட போதிலும், ஒரு ஓவருக்கு சராசரியாக 6.21 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார்.

இந்த நிலையில், அவுஸ் ரேலியாவில் பெரிதளவுக்கு றிவேர்ஸ் ஸ்விங் கிடைக்காத காரணத்தாலும், லசித் மலிங்க தொடர்ச்சியாகப் போட்டிகளில் பங்குபற்றியதன் காரணமாகவும் அவரால் அத்தொடரில் எதிர் பார்க்கப்பட்டளவிற்கு சிறப்பாகப் பந்துவீச முடியாது போனதாகவும் சம்பக்க தெரிவித்தார். குறிப்பாக தொடரின் இறுதியில் இலங்கை அணி 10 நாட்களில் 5 போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆட்ட நிர்ணய சதிகளுக்கு எதிராக வேண்டும் கடுமையான சட்டங்கள்



விளையாட்டுத்துறையில் ஏற்பட்டு வரும் ஊழல் மற்றும் மோசடிகளைக் கட்டுப்படுத்த இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கிரிக்கெட்டில் ஆட்டநிர்ணயக் குற்றங்கள் இடம்பெறுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் பேரவையின் முன்னாள் தலைவர் எஷன் மானி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஆட்டநிர்ணயத்தில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட வேண் டும் என்றும் அவர் கேட்டுக்கொணடுள்ளார்.

ஆட்டநிர்ணயத்தில் ஈடுபடுபவர்களைக் கண்காணித்து அவர்களுக்கு எதிரான விசாரணைகளை உரியமுறையில் மேற்கொள்ளக்கூடிய வகையிலான பொறிமுறை ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் கிரிக்கெட்டில் இடம்பெறும் ஆட்ட நிர்ணய சதிகளைக் கட்டுப்படுத்த சர்வதேச கிரிக்கெட் பேரவை தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

விளையாட்டு செய்திகள்

# 185 ஓட்டங்களுடன் சுருண்டது நியூஸிலாந்து

(ஹமில்டன்)

நியூஸிலாந்து அணிக்கெதிராக ஹமில்டனில் நேற்றுத் தொடங்கிய இரண்டாவது டெஸ்ட்போட்டியில் தனது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டநேரமுடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக நாணயச்சுழற்றியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய




நியூஸிலாந்து அணி, தென்னாபிரிக்க பந்துவீச்சாளருக்கு முகம் கொடுக்க முடியாமல் தனது முதல் இனிங்ஸில் 185 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அந்த அணியின் நான்கு வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

அவ்வணியின் சார்பாக மக்கலம் 61, ரெய்லர் 44, ஜிலஸ் 27, குப்ரில 22, வான்விக் 21, ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற ஏனைய நால்வர் ஓட்டம் எதனையும் பெறாமலும் இருவர், 3, 2, ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மிரட்டிய பிளண்டர் 4 , ஸ்ரெய்ன் 3, இமரான் தாஹீர் 2, மோர்கல் விக்கெட்டைக் கைப்பற்றினர். பதிலுக்குத் தனது முதல் இனிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணியின் இரண்டு விக்கெட்டுக்கள் விரைவாக சரிக்கப்பட்டன.

இதில் அணித்தலைவர் ஸ்மித் 13, ஸ்ரெய்ன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க களத்தில் பீற்றர்ஸன் 8, அம்லா 2 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர். சாய்கப்பட்ட2 விக்கெட்டுக்களையும் மார்ட்டின் கைப்பற்றினார.

# இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் நான்காவது சுற்றில் பெடரர், நடால்




(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வரும் இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில், முன்னணி வீரர்களான ரபேல் நடால், ரோஜர் பெடரர் ஆகியோர் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்ட மொன்றில், உலகின் இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், சக நாட்டு வீரரான மார்செல் கிரனோலெர்சை எதிர்த்து விளையாடினார். இதில் நடால் 6 - 1, 6 - 2 என்ற நேர் செட்களில் எளிதில் வெற்றி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில், மூன்றாம் நிலை வீரரான ரோஜர் பெடரர், 27 - ஆம் நிலை வீரரான கனடாவின் மிலோஸ் ரோவ்னிச்சை எதிர்த்து விளையாடினார். இதில் பெடரர், முதல் செட்டை டை-பிரேக்கரில் இழந்தாலும், அடுத்த செட்களை 6 - 2, 6 - 4, என எளிதில் கைப்பற்றி வெற்றி பெற்றார். மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

# அமைச்சரவையிலிருந்து விலகவுள்ளதாம் தி.மு.க.




## எச்சரிக்கிறார் கருணாநிதி

(புதுடில்லி)

இலங்கையில் நடந்த போரில் மனித உரிமை மீறல்களை இலங்கை செய்ததாகக் கூறி இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்காவிட்டால் மத்திய அமைச்சரவையிலிருந்து விலக நேரிடும் என்று மத்திய அரசுக்கு தி.மு.க எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை மீறல் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று மத்திய அரசில் கூட்டணிக் கட்சியான தி.மு.க. கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்காவிட்டால் தமிழர்களுக்கு மத்திய அரசு இழைத்த துரோகமாகவே கருதப்படும் என்று கூறிய கருணாநிதி, அமைச்சரவையிலிருந்து விலகுவது குறித்து செயற்குழுவில் முடிவெடுக்கப்படும் என்றார்.




# மத்திய ரயில்வே துறை அமைச்சர் பதவியிலிருந்து விலகினாரா?

(புதுடில்லி)

மத்திய ரயில்வே துறை அமைச்சர் தினேஷ் திரிவேதி, தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியான ரயில் கட்டண உயர்வை வாபஸ் பெற மறுத்ததால் திரிவேதியை நீக்க மம்தா முடிவு செய்திருந்தார். மேலும், ரயில்வே அமைச்சர் பதவியை முகுல் ராய்க்கு வழங்க மம்தா பரிந்துரை செய்துள்ளார்.

மேலும், மம்தா பானர்ஜி பிரதமருக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து, தினேஷ் திரிவேதி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று அதிகாலை தனது இராஜினாமாக் கடிதத்தை பிரதமரிடம் அளித்ததாகவும் பிரதமர் அதை ஏற்றுக்கொண்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

இதேவேளை அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்யவில்லை என்றும் இன்னும் மத்திய அமைச்சராக பதவியில் நீடிப்பதாகவும் தினேஷ் திரிவேதி தெரிவித்தார்.




நாடாளுமன்றத்துக்கு வெளியே அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், ரயில்வே பட்ஜெட் தொடர்பாக எம்.பி.க்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளேன் என்றார்.




# நளினிக்கு முதல் வகுப்பறை; உயர் நீதிமன்றம் உத்தரவு


(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினிக்கு வேலூர் பெண்கள் சிறைசாலையில் முதல் வகுப்பு அறை ஒதுக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பிறகு குடியரசுத் தலைவரின் கருணையால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ள நளினி பட்டதாரியாவார். இவர், தான் ஒரு பட்டதாரி என்ற அடிப்படையில் தனக்கு முதல் வகுப்பு அறை ஒதுக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# ஆடம்பரத்தை நாடும் இந்திய மக்கள்



(புதுடில்லி)

இந்தியாவில் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியாத மக்கள் மத்தியில் தொலைபேசி உள்ளிட்ட தொழில்நுட்பப் பாவனைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

63 வீதத்துக்கும் அதிகமான வீடுகளில் தொலைபேசி இணைப்புக்கள் இருக்கின்ற நிலையிலும், உரிய கழிவறை வசதிகள் இல்லை என்று புதிய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

46.9 வீதமான மக்களே உரிய கழிவறை வசதிகளைப் பயன்படுத்துவதாக அந்த ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 53 வீதத்துக்கும் அதிகமான மக்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசியின் பாவனை அதிகரித்துள்ளது.

நவீன ஆடம்பரப் பொருட்களின் பாவனையால் மக்கள் ஈர்க்கப்பட்டுள்ள நிலையில் அடிப்படை வசதிகள் குறித்த பிரச்சினைகளை அவர்கள் பெரிதுபடுத்தவில்லை என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை இந்தியாவில் 37 வீதமான மக்கள் மாத்திரமே சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதாக இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாக்குதல்

(இராமேஸ்வரம்)

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் பெட்ரோல் குண்டுகளை வீசித்தாககுதல் நடத்தினர்.

இதில் ஒரு படகு சேதமடைந்தது. அதில் இருந்த 4 மீனவர்கள் காயமடைந்தனர். அவர்கள் மற்றப் படகுகளில் ஏறி கரைக்குத் திரும்பினர்.

# கடந்த மூன்று வருட காலத்தில் நான்கு இலட்சம் பேர் மாயம்

(புதுடில்லி)

இந்தியாவில் கடந்த 2009 முதல் 2011ஆம் ஆண்டு வரையில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சுமார் 4.22 இலட்சம் பேர் என நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ராஜ்யசபாவில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ஜிதேந்திராசிங் கூறியிருப்பதாவது, கடந்த 2009இல் ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 545 பேர்களும், 2010இல் 2 இலட்சத்து 3ஆயிரத்து 489 பேர்களும் , 2011இல் 39 ஆயிரத்து 806 பேர்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து காணாமற் போனதாகத் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 5 ஆயிரத்து 111 குழந்தைகள் அடங்குவர். இவர்களில் சுமார் ஆயிரத்து 359 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# தொழுநோயாளர் எண்ணிக்கை குறைவடைந்தது இந்தியாவில்

(புதுடில்லி)

கடந்த ஆண்டுகளை விட 2010-11 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் புதிய தொழு நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் புதிதாக 2,28,474 பேர் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களாகக் கண்டறியப்பட்டனர்.

இதில் 55.5 சதவீதம் அதாவது, 1,26,800 பேர் இந்தியர்கள் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் நாடாளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் அவர் கூறியதாவது, தொழுநோயை உடனடியாக ஒழிப்பது என்பது இயலாத காரியம். ஏனெனில், இதற்கான சிகிச்சைக் காலம் சில வாரங்கள் முதல் 20 ஆண்டுகளாக உள்ளன.

புதிய தொழு நோயாளிகளின் எண்ணிக்கையை 10 ஆயிரத்தில் ஒருவராகக் குறைக்க வேண்டும் என்பது இப்போதைய இலக்கு.

இந்த இலக்கு கடந்த 2005 ஆம் ஆண்டிலேயே எட்டப்பட்டது. குறிப்பாக, கடந்த 2009-10 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2010-11 ஆல் புதிய தொழுநோயாளிகள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

தொழு நோயை ஒழிப்பதற்கு மத்திய அரசு ரூ.45 கோடி செலவிட்டுள்ளது. இருப்பினும் நம் நாட்டின் மாநிலங்களைப் பொறுத்தவரை 25,509 தொழு நோயாளிகளுடன் உத்திரப் பிரதேசம் முதலிடம் வகிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

## நல்மனத்தோர் யார்?

துவக்காலச் சிந்தனை



கடவுளுக்கு உகந்தவர்கள் இந்த உலகத்தில் யார் எனக் கருதப்படுகிறார்கள்? யாராக இருக்க முடியும்?

நல்மனம் கொண்டவர்களுக்கு அமைதி உரித்தாகுக என்று வானவர்கள் ஆண்டவன் இயேசு மண்ணில் அவதரித்த போது பாடிய மகிழ்ச்சிப் பாடல். நல்மனம் கொண்டவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்களா இல்லையா என்பது நமக்கு அப்பாற்பட்ட விடயம். ஆனால் நாம் நல்மனம் கொண்டவர்களாக வாழுகின்றோமா என்று நாம் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

கல்நெஞ்சோடு வாழும் நாம் நன்மனம் படைத்தவர்கள் என்பதற்கு யார் சான்று? நாம் சின்னச் சின்ன விடயங்களில் கூட விட்டுக் கொடுக்காமல் இருக்கிறோம். ஏன் எம் குடும்ப அங்கத்தவர்கள் மட்டில் கூட பொறாமை கொண்டவர்களாகவே நாம் இருக்கிறோம். நமது சகோதரர்கள் நன்றாக வாழட்டும் என்று வாழ்த்தும் மனம் நம் உள்ளங்களில் பூரணமாக யாருக்கு உண்டு. சமுதாயத்தில் மிகவும் கஷ்ரப்பட்டு வாழும் மக்களை சற்று உயர்த்தி அவர்கள் வாழ்வில் சந்தோசம் காணும் நல்மனம் நம்மில் யாருக்கு இருக்கு?

இப்படியான கல்மனம் எம்மைவிட்டு எப்போது அகன்று போகின்றதோ அப்போதுதான் எம் மனம் தூய்மை கொண்டதாய் இருக்கும். அப்போதுதான் நாம் கடவுளுக்கு உகந்தவர்களாக இந்த உலகத்தில் வாழ முடியும்.

**ஆர்.மதுசன், பாசையூர்.**

# கூடங்குளம் அனுமின் உலையை மூடக்கோரி கன்னியாகுமரியில் மீனவர்கள் வேலைநிறுத்தம்

(கன்னியாகுமரி)

கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி இடிந்தகரையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடந்து வருகிறது. போராட்டத்தின் 150ஆவது நாளான நேற்று தமிழகம் முழுவதும் மீனவர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளுமாறு அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் அழைப்பு விடுத்திருந்தது.

அதன்படி குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, சின்னமுட்டம், கோவளம், ஆரோக்கியபுரம், மணக்குடி பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் விசைப்படகுகள், வள்ளங்கள், கட்டுமரங்கள் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்தது. கடற்கரை, மீன்சந்தை ஆள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

மீனவர்கள் போராட்டத்தையொட்டி கன்னியாகுமரி, ஆரோக்கியபுரம், சின்ன முட்டம் பகுதிகளில் பல இடங்களில் கறுப்புக் கொடி கட்டப்பட்டிருந்தது. மேற்கு மாவட்டத்திலும் சில இடங்களில் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

- சிறுவர்களைப் போராளிகளாகப் பயன்படுத்தினார் -

# கொங்கோ கிளர்ச்சிக்குழுத் தலைவர் போர்க் குற்றவாளியாகத் தீர்ப்பு



கொங்கோவின் கிளர்ச்சிக் குழுவின் தலைவரான தாமஸ் லுபாங்கா போர்க் குற்றங்கள் புரிந்தார் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. தி ஹேகிலிருந்து செயற்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பத்தாண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட நிலையில் வழங்கியுள்ள முதல் தீர்ப்பில் தாமஸ் லுபாங்கா குற்றவாளி என்று கூறப்பட்டுள்ளது.

பதினைந்து வயதுக்கு கீழேயுள்ள சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை சிறார் போராளிகளாகப் பயன்படுத்தினார் என்பதான குற்றச்சாட்டில் அவர் குற்றவாளி என்று நீதிபதி அட்ரியன் ஃபுல்போர்ட் தீர்ப்பளித்தார்.

மற்றும் சில அமைப் புகள் 15 வயதுக்கு கீழேயுள்ள சிறார்களைப் படைகளில் சேர்த்தார்கள் என்பதில் சந்தேகத்துக்கு இடமின்றி இந்த நீதிமன்றம் திருப்தி அடைகிறது. அப்படிச்சேர்க்கப்பட்டவர்கள் யுத்தம் உட்பட பல மோதல்களில் தீவிரமாக பங்கேற்க வைக்கப்பட்டார்கள். குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்தச் சிறார்கள் படைவீர்ர்களாகவும், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லுபாங்கா உட்பட மூத்த அதிகாரிகளுக்கு பாதுகாவலர்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என்று தனது தீர்ப்பில் நீதிபதி தெரிவித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லுபாங்கா மற்றும் சில அமைப்புகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்தார் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாமஸ் லுபாங்கா யூபிசியும் சில அமைப்புகளின் தலைவராக இருந்தார். மேலும் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் அவர் அந்தப் படைகளுக்கு தலைவராக மட்டுமல்லாமல், அதன் அரசியல் தலைவராகவும் இருந்தார் என்பதும் உறுதியாகிறது. அந்த அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து நடத்தும் அனைத்து அதிகாரங்களும் அவரிடமே இருந்தன. அமைப்பின் அனைத்து நடவடிக்கைகள் குறித்த தகவல்களும் அவருக்கு தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டன.

இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடுவது முதல் அதற்குத் தேவையான உதவிகளையும் ஒருங்கிணைப்பது ஆகிய அனைத்திலும் லுபாங்காவுக்கு முக்கிய பங்கு இருந்தது என்றும் நீதிபதி கூறியுள்ளார்.

அதாவது ஆயுதங்கள் வாங்குவது, உணவு ஏற்பாடு செய்வது போன்று படைத்துருப்புகளுக்கு வேண்டிய அனைத்து முக்கிய செயற்பாடுகளிலும் அவர் ஈடுபட்டிருந்தார் என்று கூறியுள்ள நீதிபதி, தமது படைகளுக்கு ஆட்களைச் சேர்ப்பது தொடர்பில் அவர் நேரடியாக முடிவுகளை எடுத்தார் என்றும், உதாரணமாக உள்ளூர் மக்களையே ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் குறித்து அவர் உரையாற்றியுள்ளார் என்றும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கோ ஜனநாயகக் குடியரசின் வடகிழக்குப் பகுதியில் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் உக்கிரமான இனமோதல்கள் வெடித்தபோது, இந்தக் குற்றங்கள் இடம்பெற்றன.

பின்னொரு நாள் நடைபெறும் ஒரு அமர்வில் நீதிபதிகள் தாமஸ் லுபாங்காவுக்கான தண்டனையை அறிவிப்பார்கள்.

## உலகச் செய்திகள்

## பொதுமக்கள் மீது சூடு; படைவீரர் மீது பாய்ந்தது சட்டம்

ஆப்கானிஸ்தான் கந்தஹாரில் பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய அமெரிக்க படைவீரர் குவைத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெயர் குறிப்பிடப்படாத குறித்த படைவீரர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது சிறுவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட 16 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

குறித்த நபருக்கு எதிரான சட்ட நடவடிக்கை மற்றுமொரு நாட்டில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீடுகள் மீது நடத்தப்பட்ட இந்தத்தாக்குதல், ஆப்கானிஸ்தான் மக்களிடையே சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேசத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லியோன் பனேட்டாவின் ஆப்கான் விஜயத்தினைக்கருத்திற்கொண்டு, குறித்த படைவீரர் குவைத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அரசியல் சீர்திருத்தம் சீனாவிற்கு அவசியம்



சீனாவில் மேலும் அரசியல் சீர்திருத்தங்கள் தேவை என்று சீனப்பிரதமர் வென் ஜியா போ கோரியுள்ளார். நாடு பெற்று வரும் பொருளாதார நன்மைகளைப் பாதுகாக்க இந்தச் சீர்திருத்தங்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. அதிலும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவமுறையும், நாட்டின் தலைமை முறையும் மாறவேண்டும் .

அப்படியான சீர்திருத்தம் ஏற்படாவிட்டால், 1960 களில் கலாசாரப் புரட்சியால் ஏற்பட்ட துயரம் மீண்டும் ஏற்படும் அபயாம் உள்ளது.

சீன நாடாளுமன்றத்தின் வருடாந்தக் கூட்டத்தொடரின் முடிவில் உரையாற்றிய போதே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த வென் ஜியா போ, தான் பதவியில் இருந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்காக மன்னிப்புக் கோரினார். இந்த ஆண்டின் பிற்பகுதியில் சீனா தனது புதிய அரசியல் தலைமையை தேர்தெடுக்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் பஸ் மீது தாக்குதல் எதியோப்பியாவில் 19பேர் பலி

எதியோப்பியாவின் மேற்குப் பிராந்தியத் தில் பயணிகள் பஸ் ஒன்றின் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது 5 பெண்களை ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த பஸ்ஸில் 34 பயணிகள் இருந்ததாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினைகளை மையப்படுத்தி இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், உரிய காரணத்தைக் கண்டறிவதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கர்ப்பத்தடை மாத்திரைகளால் மார்பக புற்றுநோய் ஏற்படும்

(மெல்பேர்ன்)

கர்ப்பத்தடை மாத்திரைகளால் மார்பகப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஜோகன்ஸ் பர்க் தேசிய சுகாதார ஆய்வகமையத்தைச் சேர்ந்த நிபுணர் மார்கரெட் அர்பன் தலைமையிலான குழுவினர் கர்ப்பத்தடை மாத்திரை சாப்பிடும் பெண்களை மருத்துவப் பரிசோதனை செய்தனர்.



இதில் கர்ப்பத் தடை மாத்திரை சாப்பிடும் பெண களுக்கு இரண்டரை மடங்கு மாரபகப் புற்றுநோயும், ஒன்றரை மடங்கு கர்ப்பப்பை புற்று நோயும் ஏற்படும் ஆபத்து உள்ளது. ஆனால் இந்த மாத்திரைகள் சாப்பிடுவதை நிறுத்தினால் சில வருடங்களில் இப்பிரச்சினை சீராகும் எனத் தெரியவந்துள்ளது.

# பதிவிருக்கப் பெட்டகம்

வாழ்க்கை இடையறாது இயங்குகின்றது. வாழ்க்கை தேங்கி விடும் போதெல்லாம் இவை அழிக்கப்பட்டுப் புதிய அழகுகள் மீளத் தொகுக்கப்படுவதன் மூலம் வரலாறு மீண்டும் தன் பயணத்தைத் தொடர்கிறது. இதற்குக் கலைஞர்கள் உருவாக்கித் தரும் கண்ணோட்டம் ஒருவகையில் பாதையாக, பழக்கட்டாக, கருவியாக, வழித்துணையாகப் பயன்படுகிறது. இவ்வாறுதான் நமது முற்காலக் கலைஞர்களும், அவர்கள் ஆக்கி சமூகத்திற்கு விட்டுச் சென்ற படைப்புகளும் நமக்குச் சுடர் தருவதாக இருக்கின்றது.

**– நவ்வல் அல்–ஸாதனி**

இயற்கையுடனும் தனது புலன்களுடனும் கட்டுப்பட்ட மனிதன் அவற்றை வெல்வதன் மூலம் தன்னை அவற்றினின்று விடுவிதுக்கொண்டு சுதந்திரமானவனாக வளர்வதற்கு இக்கலைப் படைப்புகள் சாதனமாக இருந்திருக்கின்றன. இவ்வகையில் உற்பத்திக் கருவிகள் முதலியவற்றைப் போலவே கலைப்படைப்புக்களும் மனித வளர்ச்சியுடன் இன்றியமையாத – இரண்டறக் கலந்த இணைப்புடையவை ஆகின்றன.

இதனால்தான் கலைப்படைப்புக்கள் மனிதனது ஒய்வுநேரத்தை உபரிச்சக்தியை நாசமாக்கும் சாதனங்களாக இருந்து விடக் கூடாதென்று வற்புறுத்திச் சொல்ல வேண்டியதாகிறது.

கலைப்படைப்புக்களை அனுபவிக்கும்போது மனிதன் பெறும் நெகிழ்ச்சி, கலைப்படைப்புக்களின் இன்றியமையாத பண்பாகிய சுதந்திரத்தின் வழியே அவனுக்கு ஏற்படுவதாகிறது. இத்தகைய கலைப்படைப்புக்களின் வழியேதான் மனிதன் விலங்குநிலையிலிருந்து – அதாவது விலங்குச் செயல்களாகிய உண்ணுதல் உறங்குதல் புணர்தல் ஆகிய செயல்களினுள்ளே மட்டும் புதைவதிலிருந்து – விடுபட்டு தன்னை மனிதனாகப் பிரகடனப் படுத்திக் கொள்கிறான். இவன் படைக்கும் கலைகளே இவனைப் படைப்பவையும் ஆகின்றன.

மிகச்சிறந்த கலைப்படைப்புக்கள் இவனால் தெய்வங்களாக கொண்டாடப்பட்டதிலும் வியப்பில்லை. இக்கலை வடிவங்கள் மனித வரலாற்றின் இணையற்ற சான்றுகளாக, இலட்சியங்களாகத் திகழ்கின்றன என்பதிலும் ஐயமில்லை.

கலைகளுடன்தான் மனிதன் இயங்கியாக வேண்டும். மனித ஆற்றல்களின் மேன்மைக்குக் கலைகள் காரணமாகியுள்ளன. மனிதனின் அங்கமாக, மனித வரலாற்றில் வல்லமை மிக்க சாதனங்களாக, மறுக்க முடியா வகையில் அவனுடன் பிணைந்தவையாக இலக்கியப் படைப்புகள் கிடக்கின்றன. **– ஞானி**

படைப்பு அதன் சமூக நோக்கத்தை நிறைவேற்றும் அளவுக்கு வலுவாக இருக்க வேண்டும். சமூக நோக்கமற்ற எழுத்து என்று எதுவுமில்லை. சுயதிருப்திக்காக எழுதுபவர்கள், எழுத்தாளர்கள் என்று எமக்குத் தெரியவர நியாயமில்லை. எழுதியதை அவன் அச்சேற்றக் கொடுக்கும் போதே, அவனுக்கும் சமூகத்துக்குமான ஒப்பந்தம் உருவாகிவிடுகிறது. இன்னும் சொன்னால் சமூகத்துடனான அவன் எதிர்வினைதான் எழுத்தாக வெளிவருகிறது. இதன்பிறகு "இந்தப் படைப்பை உனக்காக நான் எழுதவில்லை" என்று எந்த வாசகனைப் பார்த்தும் எழுத்தாளன் கூறமுடியாது. எனவே அந்தப் படைப்புப் பற்றிய விமர்சனத்தைக் கூற எல்லா வாசகனும் உரிமை கொண்டவனாகிறான்.

**– இந்திரா பார்த்தசாரதி**

ஒருவர் ஷேக்ஸ்பியரை படிப்பதால் அவருக்கும், இந்த சமூகத்திற்கும் என்ன நன்மை? நீங்கள் விரும்புகின்ற புரட்சிகரமான ஒரு சமூகம் உருவானாலும், மக்களின் மனதில் உள்ள சுயநலம், மற்றவரை ஏமாற்றி பிழைக்கும் மனோபாவம், அதிகார துஷ்பிரயோகம் போன்ற மனிதத்தன்மையற்ற செயல்பாடுகள் நடந்து கொண்டுதான் இருக்கும். இந்த நிலை மாற வேண்டுமானால் மக்களின் மனதில் மாற்றம் நிகழவேண்டும். அத்தகைய மன மாற்றத்திற்கு ஷேக்ஸ்பியர், தஸ்தயேவ்ஸ்கி, பாரதி, கம்பன், வள்ளுவர் போன்றோரைப் படிக்க வேண்டும். குறைந்தபட்சம் வள்ளுவரையாவது படிக்க வேண்டும். ஒரு நல்ல மனிதனும், சமூகமும் உருவாவதற்கு புத்தகங்கள்தான் வழிகாட்டியாக இருக்க முடியும்.

**– சாரு நிவேதிதா**

இலக்கியம் மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பதாக இருக்கக் கூடாது. மனிதனைப் பற்றி மேலும் அறியத் தூண்டுவதாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கையும் தெளிவும் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

உலக நாவல்களின் விஸ்தீரணத்தையும், நமது வாழ்வு குறித்த அவற்றின் விவாதப் பரப்புகளையும் பார்க்கிறபோது, தமிழர்களாகிய நமது அபிலாசைகள் மிகக் குறுகியதாகத் தென்படுவதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஈழத்தமிழர்களாகிய நாம் இன்னும் மிக எளிதாகத் திருப்தி கொண்டுவிடுகிறோம் என்பதையும் சுட்டிக்காட்டத் தேன்றுகிறது.

**– அ.முத்துலிங்கம்**

# அரசியல் தீர்வை வழங்குவதை தடுக்க முயற்சிக்கும் கூட்டமைப்பு

## - அமைச்சர் வாசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகள் சார்பான சர்வதேச தமிழ்க் குழுக்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதை தடுக்க முயற்சிப்பதுடன் நாட்டில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தி தற்போதைய அரசியலமைப்பை "கிழித்தெறிவதன்" மூலமே எமது நாட்டுக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டைத் தடுக்க முடியுமெனவும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மார்பில் அடித்துக் கொண்டு தாய்நாடு தாய்நாடு எனப் புலம்புவதாலும் உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் உரையாற்றுவதாலும் எதுவுமே நடக்கப் போவதில்லையென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக,தேசிய மொழிகள் மற்றும் இனங்களிடையேயான நல்லிணக்கத்திற்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை நிறைவேற்ற ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுமென எமக்கெதிராக ஜெனிவாவில் அமெரிகாவினால் முன் வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இவ்வசனங்களானது படுபயங்கரமானவையாகும்.

எம்மை தூக்கு மேடையில் ஏற்றுவதற்கான திட்டமே இதுவாகும். நாம் பெற்ற வெற்றியை தலைகீழாக மாற்றி இலங்கையின் சுயாதிபத்தியம், இறைமை ஆகியவற்றிற்கு மரண ஊர்வலம் நடத்துவதற்கான முயற்சியாகும்.

தெற்காசிய வலயத்தின் அரசியல் நிலைப்பாட்டை மாற்றும் யுத்த திட்டத்திற்கமைய இலங்கை முக்கியமான கேந்திர நிலையமாகும். அத்தோடு அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் இந்து சமுத்திரத்தில் எண்ணெய் வளம் தொடர்பிலும் 'கண்' வைத்துள்ளன. இதனால் இவர்களுக்கு ஈடுகொடுக்கும் கைப்பொம்மையான ஆட்சியாளரை இலங்கையில் ஏற்படுத்துவதே எமக்கெதிரான சதித் திட்டங்களுக்கு காரணமாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கும் சூழ்நிலையிலும் அமெரிக்கா எமக்கெதிராக பிரேரணையை முன் வைத்து பொறியில் சிக்க வைக்க முயற்சிக்கின்றது. எனவே இந்தியா, பாகிஸ்தான் உட்பட தென்னாபிரிக்க நாடுகளுடன் எமது நட்புறவைப் பலப்படுத்தி நாட்டுக்குள் ஜனநாயகத்தை நிலை நிறுத்தி மக்களுக்கு சலுகைகளை வழங்கி அனைவரையும் ஓரணியில



இணைத்துக் கொள்வதன் மூலமே எமக்கெதிரான சக்திகளைத் தோல்வியடையச் செய்ய முடியும்.

அதைவிடுத்து தாய்நாடு, தாய்நாடு எனக் கூறுவதாலும் உணர்ச்சிகளை தூண்டும் விதத்தில் உரையாற்றுவதாலும் நாட்டுக்கு எதுவிதமான நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை என்றார்.

## சிற்றுண்டி விலைகள் அதிகரிக்குமா?

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள சிற்றுண்டிச் சாலைகளில், பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

அனைத்திலங்கை சிற்றுண்டிச் சாலைகள் சங்கத்தின் தேசிய இணைப்பாளர் அசல சம்பத் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இவ்வாறு விலை அதிகரிக்கப்படாவிட்டால், சிற்றுண்டிச் சாலைகளை தொடர்ந்து நடத்த முடியாமல் போகலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## வடபகுதிக்கான சுற்றுலா; ஜப்பான் பயண ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதிக்கான சுற்றுலாவில் ஈடுபடுவது தொடர்பில் தமது பிரஜைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பயண ஆலோசனைகளை ஜப்பான் மேலும் இலகுபடுத்தியுள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் வழங்கியுள்ள தகவல்களின் பேரில் வெளிவிவகார அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அரசாங்கத் தகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை நாடு முழுவதுமுள்ள தமது மக்களுக்கு ஜப்பான் மொழியில் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களைக் காட்டி வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு செல்வது குறித்து கவனம் செலுத்துமாறு தமது பிரஜைகளுக்கு ஜப்பான் முன்னர் பயண ஆலோசனைகளை வழங்கியிருந்தது.

இலங்கையில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு செல்வது குறித்து அமுல்படுத்தப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை ஜப்பான் வெளிவிவகார அமைச்சு இலகுபடுத்தியுள்ளது.

எனினும் வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்தின் சில பிரதேசங்களிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதால், அந்தப் பிரதேசங்களுக்கு செல்வதைத் தவிர்க்குமாறு ஜப்பான் வெளிவிவகார அமைச்சு தமது பிரஜைகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நிகழ்வுகள் நிறைவடைவு



(கொழும்பு)

தேசிய மாணவர் படையணி பயிற்சிகளை முடித்துக் கொண்ட வடபகுதி மாணவர்களின் பிரியாவிடை அணிவகுப்பு நிகழ்வு நேற்று முன்தினம் ரன்தெம்பேயிலுள்ள தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர .தலைமையில் நடைபெற்ற இந்த பிரியாவிடை அணிவகுப்பு வைபவத்தில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 25 பாடசாலைகளைச் சேர்ந்த 650 தமிழ் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அதேபோன்று வடபகுதி மாணவர்களுடன் இணைந்து பயிற்சிகளைப்பெற்றுக்கொண்ட குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 25 பாடசாலைகளின் 650 மாணவர்களும் இந்த வைபவத்தின் போது பிரியாவிடை பெற்றுச் சென்றனர்.

தேசிய மாணவர் படையணியின் செயறபாடுகளை வட மாகாணத்திற்கு விஸ்தரிக்கும் விசேட நடவடிக்கையின் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 650 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மாணவர் படையணியின் யாழ். கட்டளை அதிகாரி மேஜர் எச்.எம்.எச். பிலபிடிய தெரிவித்தார்.

## போலி சுற்றறிக்கை விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பெயரில் வெளியிடப்பட்டுள்ள போலி அரச சுற்றறிக்கை தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் பி. வி. அபேகோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்குத் தெரிவித்துள்ளதுடன், விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சகல அரச பிரிவுகளையும் தவறாக வழிநடத்துவதாக அமைந்துள்ள இந்த சுற்றறிக்கை "இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகள்" எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.

2003.07.15 ஆம் திகதிய சுற்றறிக்கை தொடர்பாக 'அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சட்டமா அதிபரின் பணிப்புரைகள் மற்றும் உயர் நீதிமன்ற விதிகளின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சட்டத்தின் முன் செல்லுபடியானதல்ல என்று நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

அரசாங்க சேவையில் உள்ள இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரின் பல வேண்டுகோள்களின் பிரகாரம் உத்தியோகத்தரொருவர் எவராயினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிவாதியொருவராக இருப்பின் அதன் காரணமாக உரிய உத்தியோகத்தர் ஏதாவது விசாரணைக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருகைதர முடியாது.

தயவு செய்து தங்களுக்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் என அந்த போலி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சின் செயலாளராகிய எனது கையொப்பமும் அதில் இடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 2500 கிராம சேவையாளர்களை அரச சேவையில் இணைக்கத் திட்டம்



(கொழும்பு)

புதிதாக 2 ஆயிரத்து 500 கிராமசேவை உத்தியோகத்தர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் டபிள்யு. டி.ஜே. செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறை-தொடங்கொட பிரதேச செயலகத்தின் புதிய மூன்றுமாடி கட்டடத்தை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதேச மட்டத்தில் [illegible] உள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள் ம[illegible]களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் நி[illegible]றைவேற்ற அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர்களாவார்கள்.

இந்நிலையில் ஒரு சில கிராம சேவை பிரிவுகளில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் இன்மையினால் மற்றைய கிராம சேவை பிரிவுகளில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் பதில் கடமையில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலைமையை மாற்றியமைக்கும் முகமாக அரசாங்கம் புதிய கிராம சேவை உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி 2000-2500இற்கும் இடைப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கிராம சேவை உத்தியோகத்தர் அற்ற கிராமசேவை பிரிவுகளுக்கே நியமிக்கப்படுவார்கள் என அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் பல்கலைக்கு தெரிவான மாணவனுக்கு உதவுமாறு கோரிக்கை



(வவுனியா)

வவுனியா- பாரதிபுரத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவனுக்கு உதவுவதற்கு முன்வருமாறு வவுனியா மாவட்ட பண்டாரவன்னியன் நற்பணி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா- பாரதிபுரம் பகுதியில் வசித்துவரும் கணபதி காந்தரூபன் என்ற இளைஞன் கடந்த உயர்தர பரீட்சையில் திறமைச் சித்திகளைப் பெற்று பல்கலைக்கழத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இறுதி யுத்தத்தின் காரணமாக பல்வேறு இடப்பெயர்வுகளை எதிர்கொண்ட மேற்படி மாணவன் 7 சகோதரர்களுடன் வசித்து வருகின்றார்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்த நிலையில் மிகுந்த வறுமைக்கு மத்தியில் தாயின் உழைப்பில் கற்றல் செயற்பாட்டை முன்னெடுத்த மேற்படி மாணவன், தனது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்திவிடாமல் தொடர்வதற்கு பரிவுபகாரிகள் முன்வர வேண்டுமென பண்டாரவன்னியன் நற்பணி மன்றம் கோரியுள்ளது.

இவ்விளைஞனின் கல்வி வளர்ச்சிக்காக உதவ எண்ணங்கொண்டவர்கள் இலங்கை வங்கி வவுனியா கிளையில் உள்ள பண்டாரவன்னியன் நற்பணி மன்றத்தின் 72725677 என்ற கணக்கிலக்கத்திற்கு பணஉதவியை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

# வடமராட்சி கிழக்கு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் அண்மைய நாட்களாக நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படும் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வழத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தென்பகுதிக் கடற்றொழிலாளர்கள், இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் என்பன வடமராட்சி கிழக்குக் கடற்பகுதிகளில் அனுமதியின்றி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அப்பகுதி மீனவர்களாலும் மீன் பிடிச் சங்கங்களாலும் முறைப்பாடுகள் கிடைத்துவருவதனை அடுத்து அவர் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்து அப்பகுதி மீனவர்களைச் சந்தித்து நிலைமைகளை ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒரு தொகுதி தென்பகுதி நிறுவனங்களுக்கு, கடற்றொழில் அமைச்சின் அனுமதியுடன் இவ்வருட முற்பகுதியில் கடல் அட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும் தென்பகுதி நிறுவனங்கள் வடமராட்சி கிழக்கு மீனவர்களையும் அவர்களது கடற்கலங்களையுமே பயன்படுத்தி இவ்வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். இருந்தும் தனியார் சிலர் அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் அவர்களது ஆட்களையும் படகுகளையும் கொண்டுவந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகப் புகார் செய்யப்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே யாழ். கடற்றொழில் நீரியல்வழத் திணைக்களப் பணிப்பாளர் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து ஆராயவுள்ளார்.

அத்துடன் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளின் நடவடிக்கைகள் குறித்தும் அவர் அங்குள்ள மீனவர்களிடம் தகவல்களைப் பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.


இவ்வாறு பெறப்படும் தகவல்களைக் கடற்றொழில் அமைச்சருக்கு உடனடியாக சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிறப்பு பூஜை வழிபாடு



ஜனாதிபதிக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றன. இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும் பிரதேச எதிர்கட்சித் தலைவருமான வி.கண்ணன் (ரஜனி) மற்றும் காரைநகர் கடற்படைத் தளபதி சில்வா, லெப்ரினன் கொமாண்டர் தர்மசிறி மற்றும் பொதுமக்களும் கடற்படையினரும் கலந்து சிறப்பித்தனர்.

# இலங்கையை வென்றது பாகிஸ்தான்




ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற 3 ஆவது போட்டியில் இலங்கை அணியை பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகளால் தோற்கடித்துள்ளது. 4 அணிகள் பங்குபற்றும் இத்தொடரில் இலங்கை அணி இந்தியாவுடனான போட்டியிலும் இலங்கை அணி தோல்வியுற்றது. இதனால் இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாதிருக்கும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

மீர்பூர் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை அணி 45.4 ஓவர்களில் 188 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. குமார் சங்கக்கார 71 ஓட்டங்களையும் உபுல்தரங்க 57 ஓட்டங்களையும் பெற்றனர். ஆனால் இலங்கை அணியின் 5 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடனும், இருவர் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தமை இலங்கை யின் வீழ்ச்சிக்கு காரணமாகியது.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில் அய்ஸாஸ் சீமா 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்ததினார். சயீட் அஜ்மல் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் உமர் குல் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 12.3 ஓவர்களில 33 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 3 ஆவது விக்கெட்டையும் இழந்து நெருக்கடிக்குள்ளானது.

எனினும் 4 ஆவது விக்கெட்டுககாக ஜோடி சேர்ந்த அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்கும் உமர் அக்மாலும் தமது இணைப்பாட்டத்தில் 152 ஓட்டங்களைப் பகிர்ந்து பாகிஸ்தான் அணியை பலப்படுத்தினர். உமர் அக்மால் 77 ஓட்டங்களையும் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும் பெற்றனர். ஹமாம் அஸாம் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களைப் பெற பாகிஸ்தான் அணி 39.5 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. அய்ஸாஸ் சீமா இப்போட்டியின் சிறபபாட்டக்காரராகத் தெரிவானார்.

# வீதி புனரமைப்பால் கடற்றொழில் பாதிப்பு

காரைநகர் - பொன்னாலைப் பாலப் புனரமைப்பு வேலைகளின் போது வீதியின் இருமருங்கிலும் கடலில் போடப்பட்டிருக்கும் கற்கள் மற்றும் மணல் மூடைகள் அப்பகுதியின் புனரமைப்பு வேலைகள் முடிந்தும் அகற்றப்படாமல் தொடர்ந்தும் உள்ளதனால் அப்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றினையும் பதிவு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

குறித்த கடற்பரப்பில் தமது தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறாக உள்ள இவ்வாறான பொருட்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் குறித்த கடற்றொழில் சங்கங்களினால் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலில் மீனவர்கள் ஈடுபடும்போது கற்கள் மீனவர்களது கால்களைக் காயப்படுத்துவதாகவும் படகுகளைக் கரைக்குக் கொண்டுவரமுடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மாதுரு ஓயா தேசிய வனப் பூங்கா பிரதேசத்தில் நேற்று முன்தினம இரவு இடம்பெற்ற இருதரப்பு துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் மற்றுமொரு குழுவினருக்குமிடையிலேயே இந்த் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தெஹியத்தகண்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அரச பிரதிநிதிகள்.

முன்வைத்துள்ள பிரேரணை குறித்து மனித உரிமைகள் கூட்டத்தொடரின் போது இலங்கை பிரதிநிதிகள் விரிவான தெளிவுபடுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

## நல்லிணக்க ஆணைக்குழுவின்...

எனத் தெரிகிறது. இத்தீர்மானத்தை முறியடிக்க அல்லது வாக்கெடுப்பு நடக்கவிடாமல் தடுக்க அல்லது தீர்மானத்தின் சில பகுதிகளை திருத்தங்கள் மூலம் நீர்த்துப் போகச் செய்ய, இலங்கை முக்கிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, ஜெனிவா நகரில் இலங்கை பிரதிநிதிகள் குழுவினர், இலங்கை நியமித்த, கற்றுக் கொண்ட படிப்பினைகள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவ்விதத்தில் அமுல்படுத்தப்பட உள்ளன என்பதை விளக்கும் வகையில் ஒரு திட்டத்தை, கவுன்சிலில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளனர். அத்திட்டத்தை தயாரிக்கும் முயற்சியில் முழு மூச்சாக இறங்கியுள்ளனர் என, தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தண்டிக்கப்படாத...

மகன் பாலச்சந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை குறித்த விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், பிரித்தானியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் மிலிபேண்ட், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஜோன் ஹோம்ஸ், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் இலங்கை தூதரக பேச்சாளர் கோர்டன் வைஸ் ஆகியோர் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதில் கருத்து வெளியிட்டுள்ளனர். இதேவேளை, 49 நிமிடங்கள் கொண்ட இந்தக் காணொளி குறித்து, அரசாங்கம் தமது நிலைப்பாட்டை நேற்று வெளிப்படுத்தியது. கொழும்பில் இடம்பெற்ற அமைச்சாரவைத் தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பின் போது, பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இது தொடர்பில் கருத்து வெளியிட்டார். இந்தக் காணொளிக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ளும் என அவர் தெரிவித்தார்.

## அரியாலையில்...

நீராட்டு விழாவிற்கு துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருக்கும் போது, மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அவரது நகைகள் பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கொள்ளையர்களுடன் போராடிய வேளையில் கையில் காயமுற்ற நிலையில் குறித்த பெண்மணி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினைக்கு...

கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து இலங்கை மக்கள் ஆர்வததுடன் எதிர்பார்த்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## அரசியல்...

காணொளியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் குறித்து அதிகம் கூறப்பட்டுள்ளதாகவும் அவர்களே பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று கூறப்பட்டுள்ளதன் மூலம் சனல் - 4 இன் அரசியல் நோக்கம் தெளிவாவதாகவும் ரஜீவ விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## முல்லை குட்டி தேர்தல்...

கருத்தை வெளிப்படுத்த வாய்ப்பிருக்கும் வகையிலேயே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக ஆணையாளர் நீதிமன்றத்தில் கூறினார்.

## அரசின் யுத்தக் குற்றம்...

பிரித்தானியாவின் சனல் - 4 ஊடகம் புதிய ஆவணப்படம் வெளியிட்டதனைத் தொடர்ந்து மில்லிபாண்ட் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அதேவேளை, விடுதலைப் புலிகளும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதையும் எவரும் மறுக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பண்ணாகத்தில்...

எனினும், அதனைப் பொருட்படுத்தாத மக்கள் தொடர்ந்தும் அவர்களை நையப்புடைத்தனர். இதற்குள் குறித்த இருவருடன் வந்த பெண்கள் சிலர் ஓடிச் சென்று படையினரை அழைத்து வந்துள்ளனர்.

எனினும் பொதுமக்கள் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், குறித்த இருவரையும் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் யாழ். சிறைச்சாலையில் ஒப்படைக்கப்பட்டனர். பொதுமக்களின் தாக்குதலால் காயமடைந்த பலாங்கொடைப் பகுதியைச் சேர்ந்த றொஹான் (வயது -31), சசிகரன் (வயது - 26) சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# விதிகளை மீறிய பல் வைத்திய நிலையங்கள் சுகாதார அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மற்றும் புறநகர்ப் பகுதியில் இயங்கும் எட்டு பல் வைத்திய நிலையங்கள் சுகாதார அமைச்சின் சட்ட நடவடிக்கைக்குட்பட்டிருப்பதாக யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரும் பொலிஸ் திணைக்களமும் இணைந்து யாழ். நகரிலும் புறநகர்ப்பகுதியிலும் இயங்கும் பல் வைத்திய நிலையங்களைப் பரிசோதனைக்குட்படுத்தினர். இவற்றில் எட்டுப் பல் வைத்திய நிலையங்கள் சுகாதார அமைச்சின் சட்டங்களுக்கு முரனாக இயங்கி வந்தமையைத் தொடர்ந்து அவை



மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (பா)

# பாலியல் வன்முறை தடுக்க அமெரிக்க உதவி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை தடுக்க அமெரிக்கா உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனம் இந்தத் திட்டத்திற்கு உதவிகளை வழங்கவுள்ளது. பாலியல் வன்கொடுமைகளை விசாரணை செய்யும் உத்தி முறைமைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கவுள்ளது. குறிப்பாக பாலியல வன்கொடுமைகளை விசாரணை செய்யும் தடயவியல் நிபுணர்களின் திறமைகளை மேம்படுத்தி அதன் மூலம் குற்றவாளிகளை கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமைகளைத் தடுப்பது எவ்வாறு என்பது குறித்து கொழும்பில் அண்மையில் விசேட கருத்தரங்கொன்றும் நடைபெற்றது. தடயவியல், இரசாயன பகுப்பாய்வு மற்றும் மருத்துவ துறையைச் சேர்ந்த நிபுணர்கள் இது தொடர்பில் விளக்கமளித்துள்ளனர். ஐந்து நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களின் பங்களிப்புடன் இந்த விசேட கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமைகளை விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்படுவதன் மூலம் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவறான தகவல் திரட்டும் வெளிநாட்டவர் நால்வர்

(கொழும்பு)

இலங்கை குறித்து தவறான தகவல்கள் திரட்டுவதற்காக வெளிநாட்டவர்கள் நால்வர் இங்கு வந்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றது என ஊடகத்துறை பதில் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்தார்.

உயர் பதவியிலான இவர்கள் அரசாங்கத்துக்கு எவ்வித முன் அறிவித்தலும் விடுக்காமல் வந்துள்ளனர். மனிதாபிமானம் மற்றும் ஜனநாயகத்துக்கு ஏற்ப அவர்களைக் கைது செய்யவோ நாடு கடத்தவோ அரசாங்கம் விரும்பவில்லை. திட்டமிட்டு அவ்வாறு இங்கு வந்துள்ளவர்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தவறான தகவல்களை வழங்கி வருவது மிகவும் வேதனைக்குரிய விடயம் என அமைசசர் குறிப்பிட்டார்.

# வடமராட்சி கிழக்கில் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலும் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு நடைபெற்றுள்ளது. வடமராட்சி கிழக்கு 521 பிரிகேட் படைப்பிரிவின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அனர்த்தங்களின்போது பொதுமக்களை எவ்வாறு பாதுகாக்கமுடியும் மற்றும் பாதுகாத்துக்கொள்ளல் போன்ற விழிப்புணர்வு செயற்பாட்டின் ஊடாக காட்டப்பட்டது.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு 521 படைப்பிரிவின் கட்டளைத்தளபதி குலதுங்க, மருதங்கேணி உதவி அரச அதிபர் ரி.திருலிங்கநாதன், செம்பியன்பற்று உப அஞ்சலதிபர் எஸ். மதுரநாயகம், செம்பியன்பற்று தெற்கு கிராம அலுவலர் வி.நித்தியாபதி, செம்பியன்பற்று வடக்கு கிராம அலுவலர் தவராசா, செம்பியன்பற்று கிறிஸ்தவ ஆலய பங்குத்தந்தை யேசுரத்தினம், செம்பியன்பற்று கிறிஸ்தவ ஆலய உதவி பங்குத்தந்தை எஸ்.யஸ்ரின், பொலிஸார் மற்றும் இராணுவ உயரதிகாரிகள், மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள், மருதங்கேணி பிரதேச வாழ் மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (116)

# ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## போக்குவரத்து அமைச்சர்

(கொழும்பு)


பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழியிருக்கும்போது சிலரது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள இடமளிக்கும் வகையில் தொழிற்சங்க உரிமைகளை காட்டிக்கொடுக்காதீர்கள் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் சிலர் தற்போது நாடு தழுவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது தொடர்பில் அமைச்சர் ஊடகவியலளார் சந்திப்பில் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

இங்கு அமைச்சர் மேலும் விளக்கம் அளிக்கையில்,

இது தொடர்பில் நான் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். உரிய நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதுபற்றி நான் தொழிற்சங்கங்களுக்கு அறிவித்துள்ளேன். அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க கால அவகாசம் வழங்கிய தொழிற்சங்கள் இப்போது திடீரென தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியிருப்பது அநீதியாகும்.

மக்கள் விடுதலை முன்னணியே இந்தப் பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. சம்பள அதிகரிப்பு முக்கிய கோரிக்கையாக இருப்பதால் ஊழியர்கள் அதற்கு ஆரதவு வழங்குகின்றனர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# விமானப்படை வீரர் தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு விமானப்படை முகாமில் நேற்று பிற்பகல் விமானப் படை வீரர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார். அவர் தமது துப்பாக்கியைப் பயன்படுத்தி தன்னைத்தானே சுட்டுக்கொண்டுள்ளதாக விமானப் படைப் பேச்சாளர் குரூப் கப்டன் அன்ரூ விஜேசூரிய தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பாக விமானப் படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வீதி விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் பகுதியில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த குலசிங்கம் பிரபாகரன் (வயது - 34) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்தார். (எஸ்)

# மன்னிப்புக் கோரினார் இலங்கை உயர்ஸ்தானிகர்

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து கேள்வி எழுப்பும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புலிகளுடன் உள்ள தொடர்புகள் குறித்து விசாரிக்க வேண்டுமென கூறியமைக்காக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் மன்னிப்பு கோரியுள்ளார்.

எனினும் தான் அந்த அர்த்தத்தில் கூறவில்லை. புலிகளின் பிரசாரக் குழுக்கள் வெளிநாடுகளிலும் இப்பிராந்தியத்திலும் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர் என்பதையே நான் கூறினேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரசாரங்கள் இலங்கையில் யுத்தத்தின் பின் மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்கு இடையூறாகவுள்ளது எனவும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என தான் குறிப்பிட்டது வெளிநாடுகளிலுள்ள தமிழ் குழுக்களையே அன்றி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களை அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# தேசத்தைப் பாதுகாக்க சமாதான ஊர்வலம்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக செயற்படும் சர்வதேச சக்திகளுக்கு எதிரான சமாதான ஊர்வலமொன்று கொழும்பில் நேற்று நடைபெற்றுள்ளது. தேசத்தைப் பாதுகாப்போம் எனும் அமைப்பினால் இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் சர்வமத தலைவர்கள், தொழிற்சங்கங்கள், தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், நிபுணர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

தேசத்தைப் பாதுகாப்போம் அமைப்பின் பிரதிநிதிகளினால் விசேட மகஜர், இதன்போது இலங்கைக்கான அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மன், நோர்வே, மற்றும் சுவிற்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளின் தூதரகங்களிடம் கையளிக்கப்பட்டன.


# மரண அறிவித்தல்

## யாக்கோப்பு ஜெலஸ்ரீன் ஜீவா



நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக யாழ்ப்பாணம், 432/8, மட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட **யாக்கோப்பு ஜெலஸ்ரீன் ஜீவா** 15.03.2012 காலமானார். அன்னாரின் பூதவுடல் 17. 3.2012 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**மனைவி - மேரி அன்ரனிற்றா**
**பிள்ளைகள்:-**
**அலன், சதன், ரனுசியா,**
**டல்சினா, சிம்ராஜ், பிரகாஸ்ராஜ்.**

**432/8, மட வீதி,**
**யாழ்ப்பாணம்.** (இ)

**எனது நெருங்கிய உறவினரான நெடுந்தீவைச் சேர்ந்த யாக்கோப்பு ஜெலஸ்ரீன் ஜீவா அவர்கள் காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் அவரது நண்பர்களுக்கும் எனது இதயம் கனக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**



ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்)**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.